புதினப் பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

DUPLICATE

இந்துசாதனம்

ஸ்தாபிதம் (1889)
[illegible]

பத்திரிக் கிரயம்.

(முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.)
யாழ்ப்பாணப்பட்டினம்: ஒரு வருஷத்துக்கு ரூ. ௨-௨-௦.
வெளியூர், இந்தியா: „ ரூ. ௩-௭-௦.
தொலைநாட்டுப்பகுதி: „ ரூ. ௩-௪-௦.
தனிப்பிரதி சதம் -௦௫.

THE HINDU ORGAN.

குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

விளம்பர விகிதம்.

ரூ. ச.
முதன்முறை ஓரங்குலம் ௧-௦௦.
„ அரைக்காலம் ௭-௦௦.
„ கால்கலம் ௨-௦௦.
„ ஒருஅங்குலம் -௫௦.
[illegible]

புத்தகம் - ௩0 { யாழ்ப்பாணம்:—காலயுக்திஷு தைமீ உசஉ; ககககூ-ம்ஆ பிவர்வரிமீ கூஉ. } இலக்கம் - ௨௯

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிழு துமைசசி தேகசச்
சிவம்பூத்த நிகமாக மகக ளோஙகப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது ஞாஙகப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வதிவிச்சை தொழிலவன் றேருத
வரம்பூத்த விநாயகனருள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

விளம்பரம்.

வில சகாயத்திற்கும்
ஜவுளி நாணயத்திற்கும்
பேர்போனகம்பனி எது?

மதுரை மூ. க.
இராமையர் அன் சன்ஸ்.

௨௰ எங்கள் ஜவுளிக்கம்பனியில் சுமார் ௪0 வருஷ காலமாக எங்கள் நேர் பார்வையின்பேரில் கைதேர்ந்த நெசவுகாரர்களைக்கொண்டு பலதேசங்களிலுமுள்ள வியாபாரிகளுக்கும் மற்றும் குடித்தனகாரர்களுக்கும் ஏராளமான தினுசுகள் தயார் செய்து கொடுத்துக்கொண்டும், ஏராளமான தினுசுகள் கைவசம் வைத்துக்கொண்டும், விரும்பி எழுதும் தினுசுகளை யாதொரு பிசகின்றி அனுப்பியும் விசேஷ வியாபாரம் செய்து வருகிறோம் என்பது உலகம் பூரா அறிந்த விஷயம். தவிர தற்கால நாகரீகத்திற்குத் தக்கபடி பலவூர் அநேகநூதன தினுசுகளும் வரவழைத்து ஸ்டாக்கில் வைத்துக்கொண்டு சொற்ப லாபத்திற்கு நேரிலும், வி பீ மூலம் அனுப்பிக்கொண்டு வருகிறோம். அசலூர் ஆர்டர்களை உடனுக்குடன் கவனித்து வி பீ யில் அனுப்புவோம்.

F. M S. பெடரேடெட்மலாய்நாடுகளில் இருப்பவர்கள் ஆர்டருடன் முற்பணம் அனுப்பவேண்டும் அல்லது பாங்க் மூலமாய் பெற்றுக்கொள்ளலாம் சிங்கப்பூர், பினாங்கு என்னும் இடங்களுக்கும் வி பீ யில் அனுப்புவோம்.

எங்கள் ஜவுளி விபரம் விலை யாப்தா (Catalogue.) இனமாக எழுதிபெற்றுக் கொள்ளலாம்.

மு. க. ராமய்யர் அன் சன்ஸ்
சுதேசி ஜவுளி வியாபாரிகள்.
மேலக் கோபுரவீதி
மதுரை.

சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தகா, பி தா ரு, சாலாமுஸ்லி, சப்பேமுதஸ்லி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீருள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அபாகபஸ்பம், வங்கபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை இருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨௰ அரைருத்தலுக்கு ரூபா ௬0. கால் ருத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய தொடுவாய் இராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணி ஓடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார
வைத்தியசாலை,
இல. 96 முதல் மருதானை, கொழும்பு

புதிய ஜவுளி நூல் கம்பெனி.

நயம் தினிசுகள். சொற்பலாபம். விலை சரசம்.

ஐயா,

அடியிற்கண்ட நம்முடைய ஜவுளிநூல் கம்பெனியில் பற்பல ஊர்களிலிருந்து உற்பத்தியாகி வருகின்ற தற்காலத்திற்கேற்ற நாகரீகமான தினிசுகளாயும் விலைகள்சரசமாயும் அனுப்பிக்கொண்டுவருகிறோம்.

ஹோர்ரூல் காப்பிக் கலரும், கறுப்பு சிவப்பு 1-ம் நம். 60×40-ம் நம்பர் நூல்களில் கரை 1இஞ்சு வைத்து, பச்சைக் கரை சிகப்புக் கரை கறுப்புக்கரைகள் வைத்து முந்தியில் 4 அல்லது 5 இஞ்சு பட்டுபோட்ட 16 முழச சேலை 1-க்கு ரூபா 7-8-0. டை மாதிரியில் 44×40 நம்பர் நூலிற் போட்ட 16முழச்சேலை 1-க்கு ரூபா 7-0-0. டை மாதிரி 40×32 நம்பர் நூலிற் போட்ட 16 முளச் சேலை 1-க்கு ரூபா 6-8-0. இந்த விலைகளில் காப்பிக் கலர்ச்சேலையானாலும் பினேன்கறுப்புச்சேலையானாலும் ஒரேவிதமான தினிசுகளை புதிதாய் உற்பத்திசெய்திருப்பதால் விலைகள் கண்டு எழுதியிருக்கிறோம். இன்னும் மற்ற பனாரிஸ், பெங்களூர், கோயம்புத்தூர், சேலம், ஆரணி, காஞ்சிபுரம், கொர்நாடு, கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சிறுப்பள்ளி, உள்ளூர், இன்னும் அனேக ஊர்களிலிருந்து ஏராளமாய்த் தருவித்து வைத்திருக்கிறோம். தாங்களும் வேண்டும் தினிசுகளுக்கு 100-க்கு 10 வீதம் அட்வான்ஸ் அனுப்பினால் தினிசுகள் அனுப்பப்படும்.

தாங்கள் நமது கம்பெனியில் ஒருமுறை தினிசுகள் தருவித்துப்பார்த்தால் எப்போதும் நம்முடையகம்பனிக்கே ஆர்டர்செய்வீர்கள். தவிர வேறு வவ்விடத்திலிருந்தும் தருவிக்கமாட்டீர்கள்.

தவிர 10-ம் நம்பர், 20-ம் நம்பர் நூல்களில் நாட்டு செட்டி சிகப்பு 1-ம் தரம், 2-ம் தரம், 3-ம தரம் நூல்களில் வர்ணம் தந்து, கண்ணல் சாயத்தில் 5 ருத்தல் கட்டுகளும், சிமைச் செட்டிச் சாயம் கறுப்பு மாதிரி 10-ம் நம்பர் 20-ம் நம்பர் 30-ம் நம்பர் 40-ம் நம்பர் நூல்களில் செட்டிச் சாயமுள்ள 5 ருத்தல் பெட்டிகளும் விலைகள் நயமாயும் இழைப்புக்கு தெரிகலாமலும் நயமான நூல்கள் தயாராகின்றன. தேவையுள்ளவர்கள் வி. பி. மூலம் ஆடர் செய்துகொள்ள வேண்டியது.

N.B. ஆடர்கள் உடனே தவறின்றி அனுப்பப்படும். வி. பி. சார்ஸ் பிரத்தியேகம்.

இப்படிக்கு,
M. S. RamaswamyIyer & Company,
Cloth & Yarn Merchants,
Singara Topu Street,
Madura, S. India.

26-10-18.

கேசரஞ்சித தைலம்.



இத்தைலம் நான் உபயோகித்த தைலங்களில் மிகச்சிறந்தது" என்று கல்கத்தா நியாயப்பிரமாணகல்லூரித் தலைமை ஆசிரியர் பரிஸ்தர் டக்தர் பாஜி எல். எல். டீ. அவர்களும்,

"இத்தைலம் நறுமணமுள்ளது தலைக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கக்கூடியது" என்று டக்தர் பரிஸ்தர் எல். எம். மித்திரா எம். ஏ. எம். டீ. அவர்களும்,

"தலைக்குக் குளிர்ச்சியைக் கொடுப்பதற்கு மிகச்சிறந்தது" என்று டக்தர் எம். என். பானேர்ஜி எம். டீ. அவர்களும்,

"இது நல்ல கேசரஞ்சித தைலம் தலைக்குக் குளிர்ச்சியைத் தருகின்றது" என்று டக்தர் ஏஜ். என். கோஷ் எம். டீ. அவர்களும்,

"இதிலும் அதிக நயத்தைக் கொடுக்கக்கூடிய தைலம் வேறில்லை" என்று டக்தர் யூ. மித்திரா எம். டீ. எம். ஆர். ஏ. எஸ். எல். சி. எஸ். அவர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

கேசரஞ்சிததைலம் விலை.

புட்டி 1-க்கு ரூபா 1. தபாற்செலவின்றி ரூபா 1-8-5.

புட்டி 3-க்கு ரூபா 2-8-4. தபாற்செலவின்றி ரூபா 2-8-14

சித்தமகரத்துவாச.

சித்தமகரத்துவாச என்னும் 'தொனிக்' ஆயுள்வேத ஔஷதங்களுள் மிகச்சிறந்தது. இது விலைபெற்ற மருந்து. ஏனெனில், இதில் தங்கம் சேர்ந்திருக்கின்றது. இது நெருப்புக்காய்ச்சல் முதலிய காய்ச்சல்களையும், நாட்பட்ட கழிச்சல் நோயையும், மேகச்சூட்டையும், பிரசவத்தின் பின் பெண்களுக்குண்டாகும்நோய்களையும், மண்டைப்பெலவீனத்தையும், ஞாபகக்குறைவையும், நரம்புத்தளர்ச்சியையும், கண், முகம், தோல் முதலான விடங்களிலுண்டாகும் வெளுப்புத் தோற்றத்தையும், நீரிழிவு, சொர்வாதம், குன்மம், வலி, க்ஷயரோகம்முதலிய நோய்களையும் இது அதிசயப்படக்கூடிய விதமாய்ப் போக்கடிக்கும்.

இதன் விலை தோலா 1-க்கு ரூபா 80. ஒருகிழமைக்கு உபயோகிக்கக்கூடிய மருந்து ரூபா 3.

வியாதிகளினதும் மருந்துகளினதும் விபரங்கள் அடங்கிய 'கற்லக்கு' கள் வேண்டியவர்களுக்கு இனமாயனுப்பப்படும்.

வியாதிகளைப்பற்றிச் சுருக்கமாயெழுதி யநுப்பினால் மருந்தோடு அல்லது மருந்தில்லாமல் இந்தியா, பேர்மா, இலங்கை, தொடுவாய்ராச்சியம் முதலியஇடங்களுக்கு "பிறிஸ்கிறிப்ஷன் (Prescreption) அனுப்பப்படும்.

KAVIRAJ N N. SEN,
GOVT. MEDICAL DIPLOMA HOLDER,
18-1 & 19, Lower Chitpur Road,
CALCUTTA.

JAFFNA CO OPERATIVE STORES LTD.
யாழ்ப்பாண ஐக்கியவியாபாரசங்கம்.

இச்சங்கம், கொம்பனிக் கட்டளைச்சட்டப்பிரகாரம் பதிவுசெய்யப்பட்டது.

ஒருபங்கு நூறு ரூபாயுள்ள ஆயிரம் பங்குகள் கொண்ட ஒரு லட்சம் ரூபா முதலுள்ளது.

சங்கத்தின் நோக்கம்: அரிசி, நெல், புடைவை, காய், தானிய முதலிய பல சாமான்களிலும் வியாபாரம் நடத்தல்.

1918-ம் ஆண்டு ஆகஸ்ற் மாதம் 26-ந் திகதிக்குச் சரியாய் நிகழும் காலயுத்தி வருஷம் ஆவணி ௴ ௰௨ திங்கட்கிழமை காலமே சூரியோதயத்தில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்திலே வியாபாரத் தொழில் தொடங்கிக் கிரமமாக நடைபெற்றுவருகின்றது. இன்னும் 500 பங்குகள் விற்பனவுக்கிருக்கின்றன. விரும்பியவர்கள் சங்கத்தின் லேகருக்கு மனு அனுப்பும்படி கேட்கப்படுகிறார்கள்.

M. Assipillai,
லேகர்,
J C S. Ltd.

விளம்பரம்.

தேவாலயங்களுக்கு உபயோகமான திரும்பட்டுக்குடைகள், ஆலவட்டம், கொடி, சுருட்டி, ஜாலர், மகரதோரணம், காவடிசகடைத்து முதலானவைகள் இந்தியாவில் சித்திரவேலைக்காறர்களால் செய்யப்பட்டு நமது சார்பில் சகாயமான கிரயத்திற்கு கொடுக்க விருக்கின்றன. இன்னும் அவர் அவர்கள் கேட்கும் ஓடர்களுக்குத் தக்கமாதிரிதயாரித்துக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

இப்படிக்கு,
மு. நாகலிங்கம் அன் சன்ஸ்
பறங்கித் தெரு,
யாழ்ப்பாணம்.

முதிரை, வேம்பு, பாலை, சோமுந்திரி, பூவரசு,

மேற்சொல்லிய மரங்கள் பலவித நீளத்திலும் சுற்றளவிலும் கசசேரிரோட்டில் தராக்குளத்திற்குச்சமீபமாயுள்ள ஓர் வளவிற் போடப்பட்டிருக்கின்றன.

வாங்க விருப்புவோர் வேண்டிய விபரங்களையென்னிடம் அறிந்துகொள்ளலாம்.

Dr. A CHINNIA,
Pettah Dispensary,
Jaffna.

மெடிக்கல் டிப்பாட்மென்றைச் சேர்ந்த ஒப்பந்தங்கள்.

ஹொற்தலையிலிருக்கும் குஷ்டரோகிகளின் ஆசுப்பத்திரியிலிருந்து தேங்காய்கள் வாங்கிக் கொள்வதற்காக ஒப்பந்தச் சேல்விக்கடுதாசிகள் அனுப்பும்படி கேட்கப்படுகின்றது ஒப்பந்தம் நிகழுங்காலம் 1919-ம்ஆண்டு ஐப்பசிமீ 1-ந்தேதி தொடக்கம் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று வருஷங்களுக்கு.

ஒப்பந்தச் சேல்விகள் பிரதானசிவில்மெடிக்கலாபீசரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடுதாசிப் போமில் எழுதப்பட்டு, ஒப்பந்த விசாரணைத் தலைவரின் கச்சேரியில் 1919-ம்ஆ மார்சி௴ 18-ந் தேதி மத்தியானம் 12 மணிக்குமுன் சேரவேண்டும். சொல்லப்பட்ட நேரத்துக்குப் பின் அனுப்பப்பட்ட சேல்விக்கடுதாசிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

இதைப்பற்றிய மற்றும் விபரங்களுக்கு அரசாட்சியாரின் 'கசற்' பத்திரிகையைப் பார்க்கவும். அல்லது கொழும்பில், பிரதான சிவில் மெடிக்கலாபீசரிடம் எழுதிக்கேட்கவும்.

நேத்திரரோகிகட்கோர் அறிவித்தல்.

கண்களிலுண்டாகும் எவ்வித நோய்களுக்கும் எத்த ஆயுள்வேதமுறைப்படி எனாலாக்கப்பட்ட முசற்றமான லேகியங்கள், ஔஷதங்கள் முதலியனகொண்டு நேத்திரவைத்தியநடத்திவருகின்றேன். காலை 8மணிமுதல் 10மணிவரையும்என்னது மருந்துச்சாலையில் நோயாளர் சிகிச்சைபெறலாம்.

[illegible]பன் மார்க்கட், [illegible] நாசிவம்பிள்ளை.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைத் தானவரவு.

கொழும்பில் "விஜயபாநு" என்னும் பத்திரிகையின் அதிபராயிருந்த சொர்க்கவில ஸ்ரீ. ச. சச்சிதானந்தசமயிலையமவர்களின் அபரக்கிரியையில், அவரது கனிஷ்ட சகோதரர் ஸ்ரீ சார்த் நடேச அவர்கள் எமது சபைக்கு வரித்தனுப்பிய ரூபா ஒன்று பெற்றோம்.

சி. மு. ப. சிதம்பரநாதச்செட்டி,
தனாதிகாரி

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:-காலயுத்தி ஞு தைமீ உசவ

இலங்கைக் கிருஷிச்சங்கம்.

இலங்கைக் கிருஷிச் சங்கத்தாரின் கூட்டமொன்று கண்டியிலே சென்ற ஜனவரி௴ ௩௦-ந் தேதி நடைபெற்றது. அப்போது தேசாதிபதியவர்கள் அக்கிராசனம் வகித்திருந்தனர். இக்கூட்டத்திலே இலங்கைக் கிருஷித் தலைவர் மெஸ். ஸ்தொக்டேலவர்கள் தமது அறிக்கைப் பத்திரத்தை வாசித்தபின் கௌரவ Dr. H. M. பெர்னாண்டோ அவர்களும், மெஸ் W. A. D. சில்வா அவர்களும், மெஸ் A. W. உவின்றனவர்களும் மெஸ் C டிறீபேர்க் அவர்களும், மெஸ் தொமஸ் அவர்களும் கிருஷிவிஷயமாக மிகச்சிறந்த உபந்நியாசங்கள் செய்தனர்.

டக்தர் பெர்னாண்டோ அவர்கள் பேசியபோது இலங்கையிலே நீர்ப்பாய்ச்சற் குளங்கள் இருபிரிவாக வகுக்கப்பெற்று பெரியகுளங்களின் நீர்ப்பாய்ச்சல்வேலை வேறாகவும், சிறியகுளங்களின் நீர்ப்பாய்ச்சல் வேலை வேறாகவும் நடைபெறுகின்றதென்றும், சிறியகுளங்களைக் கிராமங்களிலுள்ளவர்களே திருத்தி அவற்றினின்றும் நீர்ப்பாய்ச்சிவருகின்றனரென்றும், அவர்கள் தண்ணீர்வரி கொடுக்கிறதில்லையென்றும், பெரியகுளங்களின் நீர்ப்பாய்ச்சல்வேலை அரசாட்சியாரால் நியமிக்கப்பட்டிருக்கும் நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தரால் நடத்தப்பெற்றுவருகின்றதென்றும், இப்பெரிய குளங்களின் கீழுள்ள நிலங்கள் முடிக்குரியநிலங்களென்றும், இவைகள் ஊரவர்களுக்கும் பெரிய முதலுள்ளவர்களுக்கும் விற்கப்படுகின்றனவென்றும், சிறியகுளங்கள் சரிவரத் திருத்தப்பட்டுநன்னிலையிலிருக்குமாயின் மழை குறைவாய்ப் பெய்யுங்காலங்களிலும் அவைகளினின்றும் நீர்ப்பாய்ச்சிக்கொள்ளலாமென்றும், பெரிய குளங்களால் நீர்ப்பாய்ச்சப்படுமிடங்களுள் மட்டக்களப்பும் அம்பாந்தோட்டையுமே விசேஷமானவையென்றும், மட்டக்களப்பிலே ௧௯௧௭-ம் ஆண்டில் ௪௩000 ஏக்கர் நிலம் செய்கைபண்ணப்பட்டதென்றும், அம்பாந்தோட்டையிலே ௧௬000 ஏக்கர் நிலம் செய்கைபண்ணப்பட்டதென்றும், இவ்விடங்களில் கமச்செய்கைக்குக் கூலிக்காரரைப்பெற்றுக்கொள்ளுதல் லகுவன்று, வடமத்தியமாகாணத்திற் செய்கைபண்ணப்படக்கூடிய நிலமதிக மிருந்தும் கூலிகளின்குறைவால் ௧௧000 ஏக்கர் நிலம் மாத்திரமே செய்கைபண்ணப்பட்டதென்றும், ஸ்பெயின் தேசத்திலே ஏக்கர் ஒன்றுக்கு ௪0௧ புசல் விதமாகவும் ஜப்பானில் ஏக்கர் ஒன்றுக்கு ௭௭ புசல் விதமாகவும், இந்தியாவிலே ஏக்கர் ஒன்றுக்கு முப்பது நாற்பது புசல் விதமாகவும் நெல் விளைய இலங்கையில் ஏக்கர் ஒன்றுக்குச் சராசரி ௧௫ புசல் வரையில் விளைகின்றதென்றும், நெற் செய்கையை முறைப்படி நடத்தினால் மற்றைய இடங்களிற்போல இங்கும் நல்லவிளைவுண்டாகும்படி செய்யலாமென்றும், இலங்கை அரசாட்சியார் நீர்ப்பாய்ச்சற் குளங்களைத் திருத்தினால் அதிக நிலம் செய்கைக்குள்ளாகி இலங்கைக்குப் போதிய நெல்லு இலங்கையிலேயே விளையக்கூடுமென்றும் எண்ணங்கொண்டே அதிக பணத்தைச் செலவழித்தார்களென்றும், ஆனால் அவர்களது எண்ணம் நிறைவேறவில்லையென்றும் கூறியபின், குளங்களுக் கணித்தாயுள்ள நிலங்களைத் திருத்துவதற்கு அவற்றிற் சனங்களைக் குடியேறப்பண்ணுவதே சிறந்தவழியாகுமென்றும், குடியேற்றும்போது சதல் நிலங்களில அதாவது வயல்நிலங்களிற் குடியேற்றாது மேட்டு நிலங்களில் குடியேறச் செய்து அம்மேட்டுநிலங்களுக் கணித்தாயுள்ள வயல் நிலங்களைச் செய்கைபண்ணுவிக்க வேண்டுமென்றும், ஆடு மாடுகள் மேய்வதற்கு அங்கு வசதிகள் செய்யப்படவேண்டுமென்றும் சொல்லினர்.

இலங்கையிலே இலங்கைக்கு வேண்டிய நெல்லு விளைவிக்கப்படவேண்டுமாயின் டக்தர் பெர்னாண்டோ அவர்கள் கூறியபடி நீர்பாய்ச்சற் குளங்களுக்கணித்தாய்ச் சனங்களைக்குடியேற்றுவது அத்தியாவசியகமே. சனங்களைக் குடியேற்றும்போது அவர்களின் வசதிக்கும் சுகத்துக்கு மேற்ற ஒழுங்குகள் செய்யப்படவேண்டும். ஓரிடத்திற் குடியேறுஞ்சனங்கள் முட்டுப்பாடின்றிச் சுகமே வசிக்கக்கூடியதாயிருந்தாலல்லவா அங்கே நிலைதரமான குடிகளாவார்கள். மணற்றிடலாயிருந்த யாழ்ப்பாணம் குடியேறப்படவில்லையா? முன்னொருபோதும் குடியேறப்பெறாதிருந்த யாழ்ப்பாணமானது குடியேறப்பெற்று இப்போதுள்ள சிறந்த நிலைக்கு வந்திருக்கும்போது முன் குடியேறப்பெற்றுச் சிறந்து விளங்கிய வன்னிநாடு திரும்பக்குடியேறப்பெற்று முந்திய நிலையை யடைதலரிதாகாது. அரசாட்சியாரேற்ற முயற்சி செய்வரேல் வன்னிநாடு முன்போலக் குடியேறப்பெற்று நன்னிலைபெய்துவது நிச்சயமே.

அரசாட்சியார் வன்னிநாடுகளில் குளங்களைத் திருத்தியிருப்பினும் அக்குளங்களுக் கணித்தாயுள்ள இடங்களுக்கு லகுவில் போக்குவரவு செய்யக்கூடிய வசதிகளைச் செய்யவில்லை. வன்னி நாட்டிலே நெல்லு சிலவிடங்களில் விளைகின்றது இந்நிலங்களில் விளையும் நெல்லைப் பிறவிடங்களுக்குக் கொண்டுசெல்வதற்கு அதிக செலவுண்டாகின்றது. இவ்விடங்களில் லகுவில் போக்குவரவு செய்யத்தக்கதாக றோட்டுகள் திறக்கப்படின் குறைந்தசெலவுடன் அவ்விடங்களில் விளையுநெல்லைப் பிறவிடங்களுக்குக் கொண்டு செல்லக் கூடியதாயிருக்கும்.

இலங்கைக் கிருஷிப்பகுதியை இருபிரிவாக்கி ஒருபிரிவு தேயிலை றப்பர் முதலிய பெரியபயிர்ச்செய்கைகளின் விருத்தியின் பொருட்டும், மற்றப்பிரிவு சிறு கிராமப் பயிர்ச்செய்கையின் விருத்தியின் பொருட்டும் உழைத்துவரும்படி செய்வதும், ஒவ்வொரு மாகாண ஏசன்றரும் தமது மாகாணத்திலுள்ள வனபரிபாலன உத்தியோகஸ்தர் 'லான்ட் செற்றில்மென்ற்' உத்தியோகஸ்தர் முதலியோரோடு கூடிக் கிருஷித்தொழிலை விருத்திபண்ணுமாறு செய்வதும், ஒவ்வொரு கிராமத்திலும் முன்மாதிரித் தோட்டங்களை ஏற்படுத்துவதும் தேசாதிபதியவர்களின் கருத்தாயிருக்கின்றது. இங்ஙனம் செய்தலும் கிருஷித்தொழிலை மிக்கு விருத்தியாக்குவதற்கு ஓர் சிறந்த வழியாகும்.

நமக்குவேண்டிய உணவுப்பொருட்[illegible] நாம் நமது தேசத்திலே விளைவித்துக்கொள்ளக்கூடாதிருப்பதினால் வரக்கூடிய தீமையை இப்போது நாமெல்லாம்பிரத்தியட்சத்திற் கண்டிருப்பதால் கமத்தொழில் விஷயத்தில் ஊரவர்களும் அரசாட்சியாரும் இனிமேலதிக சிரத்தையெடுக்க ஏவப்படுவார்களென்பது சொல்லவேண்டியதில்லை.

வைதிக சைவ பிராசீன கல்லூரி விஞ்ஞாபனம்.

(பிரமஸ்ரீ. தி. சதாசிவ ஐயரவர்களால் எழுதப்பெற்றது)

யாழ்ப்பாணத்திலுள்ள பிராமண சைவ குருவகுப்பினரைப் பயிற்றுதற்கும், நம் பிராசீன பாஷைகளாகிய சம்ஸ்கிருதம் தமிழ்என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்குமாக ஒரு கலாசாலை யாழ்ப்பாணத்தில் தாபித்தல்வேண்டுமெனச் சென்ற வைகாசிமாதம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் கூடிய சைவ மகா சமாஜத்தாரால் தீர்மானிக்கப்பெற்றது. அத்தீர்மானத்தை நிறைவேற்றுதற்காக நியோகிக்கப்பெற்ற நிர்வாகசபையாருடைய அபிப்பிராயப்படி "வைதிக சைவ பிராசீன கல்லூரி" என்னும் இவ்வித்தியாலயம் தாபித்தற்கு எல்லாவிதத்தாலும் ஏற்ற இடம் சுன்னாகம் எனத் தெரிவுசெய்யப்பட்டது. அப்படியே சுன்னாகத்தில் புகையிரதஸ்தானத்துக்கும் தபாலாபீசுக்கும் இடையே தெருவுக்கணித்தாய் இரண்டு ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஒரு நிலம் 4,500 ரூபாவுக்கு வாங்கப்பட்டிருக்கிறது. வாங்கப்பட்டநிலத்தின் விலைக்கும் கட்டடச்செலவுக்குமாக இப்போது பதினாயிரம் ரூபாவுக்குக் குறையாமல் வேண்டியதாயிருக்கிறது.

வாங்கப்பட்ட இந்நிலத்தில், உடனே சிறிதாக ஒருகட்டடத்தை அமைத்து அதில் பாடசாலையை ஆரம்பிக்கவும் அதற்காக இந்தியாவிலிருந்து சம்ஸ்கிருத பண்டிதரும் கனபாடியுமான ஒரு சாஸ்திரியை நியோகிப்பதற்கும் ஆகிய முயற்சிகள் செய்யப்படுகின்றன.

இம்முயற்சிகள் சீக்கிரத்தில் இனிது கைகூடும் வண்ணம் சைவப்பிரபுக்கள் எல்லோரும் உதவிபுரிதல் வேண்டும். முற்காலத்திலிருந்த எம் முன்னோர்கள் கோயில், குளம், மடம், பள்ளிக்கூடம் என்பவற்றிற்காக எண்ணற்றபொருளைத் தருமஞ்செய்திருக்கிறார்கள். வித்தியாதானமே மிகச் சிறந்ததென்றும், அதுவே எம் நிலையை உயர்த்துஞ் சாதனமென்றும் எல்லோரும் அறிவர்.

சைவசமயம் வளர்ந்தோங்கிப் பிரகாசித்தற்கு அச்சமயக் குருமார் நன்றாகக் கற்றுச் சமயசாஸ்திர உணர்ச்சி நிரம்பப்பெற்றவராயிருத்தல் அவசியம். அதற்காகவே இந்தப்பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பெறுகின்றது. இதற்குப் பொருள் கொடுத்து உதவி செய்பவர், மற்றெல்லாப் புண்ணியங்களையுஞ் செய்த பலனைப் பெறுவர். குருக்கண்மாராய் வருபவர்களுக்குக் கல்வி கற்பித்து அவருக்கு வேத ஆகம அறிவு வரச் செய்தல் எல்லாவற்றினுஞ் சிறந்த பதிபுண்ணியமாகும். இதனை,

"நிறைந்த ஆகம ஞான நிட்டர்க்கிடில்
அறிந்து மற்றறி யாமையொ டாயினுஞ்
சிறந்த பாலன் முகத்தொலை நீர்த்துதேர்
உறைந்த சத்திய லோகம் புகுவரே."

என்னுஞ் சிவபுண்ணியத் தெளிவுச் செய்யுளானு மறியலாம்.

இக்கருமத்துக்குப் பொருள் கொடுப்போர் தாம் கொடுக்கவேண்டிய தொகை முழுவதையும் ஒரு முறையிலேயே கொடுத்துவிடல் வேண்டும் என்னும்நியதியின்றி தம்மாலியன்ற பெருந்தொகையினைக் குறிப்பிட்டுப் பின்பு அதனைப் பாகம்பாகமாய் மாதந்தோறுமேனும் வருடந்தோறுமேனுங் குறித்த தவணைகளிற் செலுத்திவரலாம். இங்ஙனம் பொருள் கொடுத்து உதவுவோர் பெயரும் தொகையும் முதலியன பத்திரிகைவாயிலாக வெளியிடப்படும்.

ஆகையால் சைவசமயிகளாகிய சீமான்களே! சீமாட்டிகளே! உங்கள் பொருளில் ஒரு சிறிது பாகத்தை இந்தத் தர்மத்துக்குச் செலவிடுவீர்களாயின் அதுவே நீங்கள் உங்கள் சந்ததிக்குத் தேடிவைக்கும் பெரிய ஆஸ்தியாகும். தாம் பிற்காலத்துக்காகுமென்று எண்ணிச் சேமித்து வைத்த பொருளே அவ்வாறாகக்கூடிய சேமதனமாகுமென்று ஒருவரும் நினைத்து மயங்காதிருக்கக்கடவர். அப்பொருளைத் தாமும் அனுபவித்து அப்பொருள் அளவுக்குத் தக்கபடி இம்மை மறுமைகட்கு ஏற்றவாறு கொடுத்துத் தக்க பாத்திரமறிந்து கருமஞ் செய்வாராயின் அதுவே அவர் இளைத்துச் சோர்வடைந்த காலத்தில் சேமதனமாய் உதவுவதாம் என்னும் கருத்தமைந்த

"வைத்ததனை வைப்பென் றுணரற்க தாமதனைத்
துய்த்து வழங்கி இருபோதும்—அத்தகத்
தக்குழி ஈகை அறஞ்செயின் அஃதன்றே
எய்ப்பினில் வைப்பென் பது."

என்னும் பழமொழியினைக் கடைப்பிடித்து எல்லோரும் இயல்வது கரவாது அறஞ்செய்வாராக.

சமாச்சாரம்.

யாழ்ப்பாணம் குறுக்குறோட்டு இஞ்சினீர்:— யாழ்ப்பாணம் லோக்கல்போட் சுபெறின்றன் ஸ்ரீ. இரத்தின கோபாலரவர்கள் யாழ்ப்பாணக் குறுக்குறோட்டு இஞ்சினீராக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

உத்தியோக மாற்றம்:—இலங்கை றிஜிஸ்றார் ஜெனறல் மெஸ். டீசேர்ஸ்லி அவர்கள் மத்திய மாகாண ஏசன்றாகவும், மத்தியமாகாண ஏசண்டர் மெஸ். லேனவர்கள் றிஜிஸ்றாராகவும் ஒரு மாசத்துக்கு மாறி வேலைபார்க்க உத்தரவளிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஓர் உருமோசம் போனது:— யாழ்ப்பாணம் மு. க. பெ. ரி. கடையைச் சேர்ந்த 'விக்தோரியா'' என்னும் உருமரமேற்றிச் சென்றபோது, ரங்கூனுக்கும் சென்னைக்குமிடையில் தண்ணீரோலி மோசம்போய்விட்டது. இவ்வுரு ஏறக்குறைய 40,000 ரூபா பெறுமதியுள்ளதாம்.

முத்துச் சம்பா:— தென்னிந்தியாவிலிருந்து மார்ஜ் அல்லது ஏப்றல்மாசத்தில் முத்துச்சம்பா அரிசி இங்குவரும்போலிருக்கின்றது. இந்தியாவில் இவ்வருட வேளாண்மை நயப்பாயிருப்பதால் சென்னை அரசாட்சியார் அரிசிஏற்றுமதி செய்யத் தடைசெய்யாரென எண்ணப்படுகின்றது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி:— யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகார சபையாரின் வருஷாந்தக்கூட்டம் சென்ற சனிவாரத்தன்று நடைபெற்றது அப்போது கௌரவ சேர். அம்பலவாணர் கனகசபையவர்கள் அக்கிராசனத் தமர்ந்திருந்தனர். இக்கூட்டத்தில் காலேஜ் லேககரவர்களின் அறிக்கைப்பத்திரமும், வரவுசெலவுக்கணக்கும் வாசிக்கப்பட்டபின, வருகிற வருடத்திற்கு ஸ்ரீ. க. மு. சின்னையா முதலியாரவர்கள் லேககராகவும், அத்துவக்காத் ஸ்ரீ. சு. இராசரத்தினமவர்கள் உதவிலேககராகவும், புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

சுப்பிறீங்கோடு:—யாழ்ப்பாணம் கிறிமினல் விசாரணைச் சுப்பிறீங்கோடு சென்ற திங்கட்கிழமை ஆரம்பமாயிற்று. அப்போது சிரேஷ்ட நீதிபதி சேர் அன்றன் பேட்றும் அவர்கள் நீதாசனம் வகித்திருந்தனர். இக்கோட்டில் முதன்முதல் ஆனைக்கோட்டைக் கொலைவழக்குவிளக்கப்பட்டு எதிரிக்கு ஒருவருஷ மறியல் விதிக்கப்பட்டது. இதன்பின் ஒருவர் கள்ளக் கையெழுத்திட்டாரென்னுங் குற்றச்சாட்டின்பேரில் விளக்கப்பட்டு நிரபராதியாகி விடுதலையடைந்தனர். மூன்றாவதாய்ப் புலோலிக் கொலைவழக்கு ஆரம்பமாகி நடைபெறுகின்றது.

சென்னை ஆயுர்வேத வைத்தியகல்லூரி:— இந்தியாவிலதிகப் பிரபல்லியம் பெற்று விளங்கும் வைத்தியரத்தின பண்டிதர் ஸ்ரீ D கோபாலசாலு என்பவரால் நடத்தப்படும் சென்னை ஆயுர்வேத வைத்திய கல்லூரிப் பிரவேசபரீட்சையில் ஊரெழு ஸ்ரீ சங்கரப்பிள்ளை ஆறுமுகம்புத்திரன் ஸ்ரீ கனகரத்தினம் மேலாகச் சித்தியடைந்து அக்கல்லூரியில் வைத்தியங் கற்கத் தொடங்கியிருக்கின்றனர். ஆயுர்வேத வைத்தியங் கற்க விரும்பும் ஏனையமாணவரும் இவரைப் பின்பற்றுவாராக.

தொண்டைமானாறு ஆங்கில திராவிட வித்தியாசாலை:—யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் ஓர் கிளைப்பாடசாலையா யிருப்பதும், ஓர் பிரபல வர்த்தகரும் தனவந்தருமான தொண்டைமானாறு ஸ்ரீ. எஸ் வீரகத்திப்பிள்ளையவர்களால் ஸ்தாபிக்கப்பெற்று மாசவீதம் 170 ரூபா வரையிற் செலவிட்டு அவரால் தாபரிக்கப்பட்டு வருவதுமாகிய தொண்டைமானாறு ஆங்கில திராவிட வித்தியாசாலையை இரண்டாகப் பிரித்து ஆங்கிலவித்தியாசாலையாகவுந் திராவிடவித்தியாசாலையாகவும் நடத்தும்படி வித்தியாகர்த்தரவர்கள் உத்தரவளித்திருக்கின்றனர். ஆங்கிலபாடசாலை இந்தமீ 1உ ஆரம்பமாகியிருக்கின்றது. இதன் தலைமை உபாத்தியாயராகக் கொழும்பு உபாத்திமார் கல்லூரியிற் கற்றுத்தேறி 1-ம் வகுப்புத் தராதரப்பத்திரம்பெற்றிருக்குமொருவர் அடுத்த மாசம் நியமிக்கப்படுவர். இப்பாடசாலையில் "ஸ்கூல் வைனல" வகுப்பு வரைக்கும் பிள்ளைகள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். ஸ்ரீ. வீரகத்திப்பிள்ளையவர்களின் உதவிகொண்டு இப்பாடசாலையானது ஓர் கல்லூரியாகுமென்றே நினைக்கின்றோம்.

உடையார்மார் நியமனம்:—கந்தரோடை விதானை சுன்னாக உடையாராகவும், காங்கேசன் துறை விதானை காங்கேசன்துறை உடையாராகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் சரஸ்வதி விலாச சபை:— இச்சபையார் சென்ற இரவு யாழ்ப்பாணம் முற்றவெளியிலுள்ள "றிஜ்வே" மண்டபத்தில், இலங்கைச் சிரேஷ்ட நீதிபதி சேர் அன்றன் பேட்றும் அவர்களின் அனுசரணையில் அரிச்சந்திரநாடகத்து மீட்சிக்காண்டத்தை நாடகமாக நடித்தனர். அச்சபையத்தில் சிரேஷ்ட நீதிபதியவர்களும் அவரது பாரியாரும் உயர்ந்த உத்தியோகஸ்தர்களும் பிரபுக்களுஞ் சமுகமாயிருந்தனர்.

ஊரவர்களின் விருப்பமும் தவறணைகளும்:— தவறணைகளிருக்குமிடங்களிலே தலைவரிப்பணங் கொடுப்பவர்களாயுள்ளவர்களில் நூற்றுக்கு எழுபத்தைந்து வீதமானோர் தாம் வசிக்குமிடங்களிலுள்ள தவறணை அல்லது தவறணைகளை எடுத்துவிடவேண்டுமென விரும்பினால் அத்தவறணை அல்லது தவறணைகள் எடுக்கப்படுமென அரசாட்சியார் ஓர் ஏற்பாடு செய்திருக்கின்றனர். இவ்வேற்பாட்டின்படி சிலவிடங்களில தவறணைகள் எடுபட்டிருக்கின்றன. கச்சேரியிலே சென்ற ஜனவரி௴ 15உ ஆறு தவறணைகளைக் குறித்துச் சனங்களின் விருப்பம் கேட்கப்பட்டபோது அத்தவறணைகளில் 5 தவறணைகளிருக்குமிடங்களில தலைவரிப்பணங்கொடுப்பவர்களுள் நூற்றுக்கு எழுபத்தைந்து பேருக்கு மேற்பட்டோர் சென்று அத்தவறணைகளை எடுத்துவிடும்படி கேட்டிருக்கிறார்கள். பெருங்கேட்டிற் கெல்லாம் ஏதுவாயிருக்கின்ற வெறிநீர்ப் பதார்த்தங்கள் விலைப்படும் தவறணைகளை நீக்கிக்கொள்ள அரசாட்சியார் நமக்கு இடந்தந்திருக்க, நாம் நமது மத்தியில் மதுபானக் கடைகள் நடைபெறவிட்டிருப்பது பெரும் வெட்கமே.

சீமை செல்லும் உத்தியோகஸ்த்தர்கள்:— இலங்கைக் கொலோனி செக்கிறிட்டெறியவர்களும், இலங்கைச்சுப்பிறீங்கோட்டுச் சிரேஷ்ட நீதிபதியவர்களும், சமுசாரசகிதர்களாய் வருகிற மாசம் உஉ-ம் உ [illegible] லீவில் சீமை செல்வர்.

தேகவியோகம்— வல்லுவெட்டித்துறை சப்கொலைக்டராகவிருந்து இளைமாறி இறந்துபோன ஸ்ரீ ஆறுமுகமவர்களின் பௌத்திரியும், யாழ்ப்பாணம்மணியகாரனாயிருந்த ஸ்ரீ C. K ஆறுமுகமவர்களினதும், வவுனியாவில கிராமக்கோட்டு நீதிவானாயிருக்கும் ஸ்ரீ. கந்தரவர்களினதும மருகியும், கொழும்புத்துறை சைவப்பிரகாச வித்தியாசாலை மானேசர் ஸ்ரீ. க. சுவாமிநாதரவர்களின் கனிஷ்டபுத்திரியுமான ஸ்ரீமதி. அன்னலக்ஷ்மி அம்மாள் சென்ற செவ்வாய்க்கிழமை காலை தேகவியோகமாயினர். ஈசுரபக்தி ஜீவகாருண்ய முதலிய சுகுணங்களையப்பெற்ற இப்பெண்மணியை அறிந்த எவராவது இவரது அகாலமரணத்தைக்குறித்துப் பிரலாபியாதிரார். தங் காதல் மனைவியிழந்துதுன்புறும்,பெற்றோரோடும் மாதுலராதி சுற்றமித்திரரோடும் எமது அனுதாபமுமிருக்கின்றது.

—கண்ணார்பண்ணை தென்மேற்கு உடையாராயிருந்து காலஞ்சென்றுபோன ஸ்ரீ இராமலிங்கமவர்களின் சிரேஷ்ட புத்திரரும், பிரசித்த ஆயுள்வேத வைத்தியராயிருந்த ஸ்ரீ. ச. பொன்னப்பா அவர்களின் மருகரும், மேற்படிபகுதியின் விதானையுமான ஸ்ரீ. முத்துவேலு அவர்கள் நேற்றுச் சாயுங்காலம் காத்திராப்பிரகாரம் தேகவியோகமாகிவிட்டனர். இவரையிழந்து துன்புறும் இவரது சுற்றமித்திரரோடு எமதனுதாபமுமிருக்கின்றது.

—தெல்லிப்பழையைச் சார்ந்தவரும் தொகவாயி ரசியப்பகுதியல ஓர் டிஸ்திறிக்ற் டிறுப்பிக் இன்ஸ்பெக்றா யிருப்பவருமாகிய ஸ்ரீ. P. தம்பையா அவர்களின் சிரேஷ்ட புத்திரி சிவபாக்கியம் சென்ற 31-ந் தேதி தனது தந்தையாரின் உத்தியோக ஸ்தானமாகிய தம்பிளில தேகவியோகமாகிவிட்டனர். இறக்கும்போது வயசு 13. சுவாசரோயே மரணத்திற்குக் காரணம். இவரை இழந்து துன்புறும் சுற்றமித்திரரோடு எம்மனுதாபமு மிருக்கின்றது.

"பிரபஞ்ச விசாரம்."

இது, யாழ்ப்பாணம் (குகதாசர்) ஸ்ரீ. ச. சபாரத்தினமுதலியாரவர்களியற்றிய அரியநூல்களில ஒன்று. அவர்கள் சிலகாலத்துக்கு முன் இயற்றி வெளிப்படுத்திய "ஈச்சுர நிச்சயத்"துக்கு இரண்டாம்பாகமாக உள்ளது கடவுளுண்மையை நிறுத்துதற்கண் "ஈசுரநிச்சயம்" சுபக்ஷமாகவும், இது பரபக்ஷமாகவும் அமைந்துள்ளன. "ஈச்சுர நிச்சயத்"தின்கண்ணே ஆக்ஷேப நிராகரணசகிதமாகக் கடவுளுண்மை பற்பல ஏதுக்கள்கொண்டு தாபிக்கப்பட்டுள்ளது. "பிரபஞ்ச விசார"மாகிய இந்நூலின்கண்ணே கடவுளுண்மையைப் புறந்தந்து தத்தந்துணிபுகளைச் சாதிப்போரது கொள்கைகள் எல்லாம் பூர்வபக்ஷஞ்செய்யப்பட்டுக் கடவுளுண்மை சித்தாந்தமாக நாட்டப்பட்டுள்ளது பிரபஞ்ச உற்பத்தியைக் குறித்து ஆராயுமுறுவார்க்குக் கடவுளுண்மை தெள்ளிதிற் புலப்படுமென்பது இந்த நூலால் நன்கறியக்கிடக்கின்றது.

இந்த நூலகத்தே கடவுளுண்மையை ஆக்ஷேபிப்போருடைய கொள்கைகள் மாத்திரமன்றி, அதனைச் சந்தேகிப்போருடைய கொள்கைகளும் உலக விருத்தியே மாந்தர்களுக்கு உறுதிபயத்தது என்னும் லௌகிகவாதிகளுடைய கொள்கைகளும, பிரபஞ்சோற்பத்தியைக் குறித்துப் பல தவறுடைக் கொள்கைகளைக் கொண்டொழுகும் கிறிஸ்தவர் மாயாவாதிகள் முதலிய அன்னியருடைய கொள்கைகளும் மிக விரிவுற விசாரித்துக் கண்டித் தொதுக்கப்பட்டுள்ளன.

இந்நூல் நாத்திக மரபு, சந்தேக மரபு, ஆத்திகமரபு என்னும் மூன்று பாகங்களாகப் பகுக்கப்பட்டு, நாத்திக மரபின்கண்ணே உலோகாயதம், பௌதிகவாதம், பரமாணுவாதம், பரிணாம

வாதம், நிதாபாசவாதம், சூனியவாதம், பிரயோசனவாதம், நிரீச்சுரசாங்கியம் ஆகிய எண்வகை நிரீச்சுரவாதக் கொள்கைகளும்; சந்தேகமாயின் கண்ணே சந்தேகவாதம், பௌத்தசமயம், மீமாஞ்சம் ஆகிய மூவகைச் சந்தேகவாதக் கொள்கைகளும்; ஆத்திகமாயின்கண்ணே பிரபஞ்சோற்பத்தியைக் குறித்த உண்மையை உள்ளபடி அறியாத கிறிஸ்துமதம், மாயாவாதம் ஆகிய இருதிற ஆத்திகக் கொள்கைகளும் கண்டிக்கப்பட்டு, பிரபஞ்சத்துக்குக் காரணராகிய கடவுள் ஒருவர் உளர் என்பதும், அக்கடவுளுக்கும் பிரபஞ்சத்துக்கும் உள்ள சம்பந்தம் இது என்பதும், அச்சம்பந்தம்பற்றி அவர் பிரபஞ்சத்தைத் தோற்றி ஒடுக்குமுறை இது என்பதும் சைவசித்தாந்தக் கொள்கைப்படி எடுத்து விளக்கப்பட்டு, அந்தக் கொள்கையே உண்மைத் துறையாம் என்பது வெள்ளிடைமலைபோற் றெள்ளிதிற் புலப்படுமாறு காட்டப்பட்டுள்ளது.

இந்த நூலின்கண்ணே இக்காலத்தில் மேலைத்தேசங்களில் Materialism, Agnosticism, Utilitarianism, Nihelism, Idealism, Evolution theory, Atomic theory முதலிய பல பெயர்கொண்டு வழங்கும் பல துறைகளும் ஆராயப்பட்டு, இந்தத் துறைகள் எல்லாம் எமது பூர்வ ஆரிய சாத்திரங்களாற் கண்டித் தொதுக்கப்படுமாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இது பாயிரமுள்பட டெமி 275 பக்கங்கள் கொண்ட புத்தகமாக உயர்ந்த காகிதத்தில் சென்னபட்டணம் ஸ்ரீ. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்களால் அவ்வூர் "ஆர்பனேஜ்" அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டுளது. விலை பிரதி ஒன்று ரூபா ஒன்றரை. வேண்டுவோர் நூலாசிரியருக்காவது பதிப்பாசிரியருக்காவது எழுதிப் பெற்றுக்கொள்க. எமது பார்வைக்கனுப்பிய பிரதியை நன்றியறிதலுடனேற்றோம்.

௩௩-வது
இந்தியன் நாஷனல் காங்கிரஸ்.

(அக்கிராசனாதிபதியாகிய கௌரவ ஸ்ரீமான் பண்டித மதன்மோகன் மாளவியா அவர்களின் உபந்நியாசம்)

(சென்ற பத்திரிகைத் தொடர்.)

நியாய சுதந்தரக் கிளர்ச்சிகளை எதிர்த்து இந்தியப்பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பாதுகாப்பில் தேசபக்தர்களை வைப்பது போன்ற பல செயல்கள் பொதுஜனங்களின் மனதைப் புண்படுத்துகின்றன. இந்தியர்கள் மட்டும் இக்கிளர்ச்சியைச் செய்கின்றார்கள் என்று கொள்ளக்கூடாது. ஆங்கில கனவான்களும் சீமாட்டிகளும் இந்தியாவிற்குச் சுய உரிமை வழங்கப்பட வேண்டியது அவசியமெனக் கூறுகின்றார்கள். கல்கத்தா லார்டு பிஷப்பைப்போன்ற உத்தம ஆங்கிலேய மகான்கள் 'நமது நிலைமையானது இச்சண்டையினால் புதிய இலட்சியங்களின்று கவனிக்க வேண்டும்'. இந்தியாவில் இனி பிரிட்டிஷ் ஆட்சியானது இச்சண்டையினால் ஏற்படும் புதிய இலட்சியங்களையே ஆதாரமாய்க் கொண்டு அதன் ஜனங்களின் தேவைக்கும் விருப்பத்திற்கும் இணங்கிய வழியில் முன்னேற்றம் பெறக்கூடியதாயிருக்க வேண்டும். இவைகளைக் கருத்திற்கொண்டு இந்தியர்களை அரசாங்கத்தார் சுய ஆட்சியை அடைந்து [illegible] மார்க்கத்தில் பழக்குவிக்க வேண்டும். இதற்கு மாறாக நாம் நடந்து வந்தோமானால், நாம் சுதந்தரத்தை நிலைநாட்டும் நோக்கத்தைக் கொண்டுள்ளோமென்பது போக்கிரித்தனமான காரியமென கடவுளால் கருதப்படும் என்றார். ஆதலால் அரசாங்கத்தார் நமது நோக்கத்தைப்பகிரங்கமாக வெளியிடவேண்டியவர்களாயிருந்தார்கள். இந்த நிலைமையில் சென்ற 1917 ம் ஆ. ஆகஸ்டு மீ 20 ந் வ. இந்தியா மந்திரியவர்கள் ஓர் உறுதிமொழியை வெளியிட்டிருக்கின்றார்கள். அதில் இந்தியாவிற்குச் சீக்கிரம் பொறுப்புள்ள அரசாங்கம் கொடுக்கப்பட வேண்டிய விஷயமாகப் பிரதம சுய ஆட்சி சாதனங்களைப் படிப்படியாக வழங்கவேண்டுமென்பதே நமது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் திட்டமான நோக்கமென வெளியிடப் பட்டிருக்கின்றது. இதற்கு வேண்டிய மார்க்கங்களை உடனே செய்வதெனத் தீர்மானித்து மிருக்கின்றார்கள். இச்சமயத்தில் இத்தகைய அறிவிப்பு சமயோசிதமான தென்பதை மறுப்பாரிலர். ஆயினும் அதில் அனாவசியமான பயமும், ஜாக்கிரதையும் காட்டியிருப்பதாகத் தெரிகிறது. அதன் யோக்கியதா பட்சத்தைப்பற்றி நாம் சற்றும் கவனியாமல் முன் அறிவித்துள்ளபடி பொறுப்புள்ள அரசாங்கம் முழுமையுங் கொடுக்கப் படுமென்று எதிர்பார்த்திருந்தோம். பிறகு வைசிராயின் வேண்டுகோளிற்கிணங்கி இந்தியா மந்திரி இங்கு விஜயம் செய்து ஜனங்களின் உள்ளத்தை அறிந்து, எத்தகைய சீர்திருத்தம் வழங்கலாமென்பதை வரைந்து வெளியிட்டு விட்டார். இனிப்பார்லிமெண்டுக்கு அனுப்பப்படும்போது அச்சீர்திருத்தப் பிரேரேபணைகளின் மீது பொது ஜனங்கள் கூறும் அபிப்பிராயங்களையும் கவனிக்கப்படும் என்று கூறப்பட்டது. ஆதலால் அவ்வார்த்தைகளை நல்வரவேற்று மகிழ்ந்தோம். அதில் அதிருப்தியான விஷயங்கள் பல ஏற்பட்டிருந்த போதிலும், நாம் அவற்றின் மீது சிறிது நம்பிக்கை வைத்து அதையும் நன்றியுடன் ஏற்றோம். மிஸ்டர் மாண்டேகு சில கூட்டாளிகளுடன் சேர்ந்து ஆகஸ்டு மீ 20 தேதி அறிவித்த விஷயங்களை ஆதாரமாய்க் கொண்டு இங்கு விசாரணைக்கு வந்து சேர்ந்தார். அவரும் லார்டு செம்ஸ்போர்டும்; பிரேரேபித்துள்ள சீர்திருத்தங்கள் தாம் கூறிய வற்றிற்கு இணங்கிய பிரதம சுதந்தரங்களென நிரூபிக்க மிகப்பெரிய புத்தகமொன் றெழுதி யிருக்கின்றார்கள். இந்தப் பெரிய சீர்திருத்தத்தைச் சில மாதங்களாக நம்மவர் ஆராய்ச்சி செய்து வருகின்றார்கள். சிலர் அதைப் போற்றினர். சிலர் நமக்குத் தகாதவை யெனத் தூற்றினர். சிலர் இதனை மறுத்தொழிக்க வேண்டுமெனக் கூறினர். காங்கிரஸின் திருத்தமானது, மாகாண இம்பீரியல் அரசாங்க அதிகாரங்களில் சில இந்தியா கவர்ன்மெண்டாரிடம் விட்டது போக மாகாணங்கள் இந்தியப் பிரதிநிதிகள் பொறுப்பிலிருக்க வேண்டுமெனக் கூறியது. ஆனால் அரசாங்க உத்தியோகஸ்தர்களின் திருத்தப் பிரேரேபணை இக்கோரிக்கைக்குக் குறைந்தவையாகவே யிருக்கின்றது. ஆதலால் அவைகள் நமக்குப் போதாதவை எனப் பொதுவாகக் கருதப் பட்டன. மொத்தத்தில் இந்தப் பிரேரேபணையானது இப்பொழுது இருக்கும் நிலைமையைக் காட்டிலும் சிறிது நன்மையைத் தரக்கூடிய தெனக் கருதப் பட்டாலும், பொது ஜனங்கள் அத்திருத்தத்தின் மீது மிக்க அதிருப்தி கொண்டவர்களாகவே இருக்கின்றனர். அநேகமாய்ப் பலர் சில திருத்தங்கள் அவசியம் செய்யப்பட வேண்டுமென்றே கூறுகிறார்கள். மாகாண அரசாங்க விஷயத்தில் சில பொறுப்புள்ள அரசாங்கத்தை ஜனங்களுக்குக் கொடுக்க வேண்டிய நோக்கத்துடன் வெளியிட்டிருக்கும் பிரதமதிருத்தங்கள் ஆகஸ்டு மீ 20-ந் தேதி அறிக்கைக்கு ஒத்தவை என்றே சொல்லலாம்.

இந்த அபிப்பிராயம் எல்லா ஜனங்களாலும் அங்கீகரிக்கப்பட்டது. பம்பாயில் தனிக் காங்கிரஸ் கூடும்போது சிலர் காங்கிரஸ் லீக் திருத்தங்களைத் தவிர வேறு ஒன்றையும் அங்கீகரிக்க முடியாது என்று மாண்டேகு செம்ஸ்போர்ட் திருத்தத்தைத் தள்ளிவிட உத்தேசித்திருக்கிறார்களென்று ஒரு வதந்தி பரவிற்று. காங்கிரஸில் அப்படியான விஷயம் ஒன்றும் நடைபெறவில்லை. இதிலிருந்தே இந்த வதந்தி சரியானதல்லவென்று புலனாயிற்று. மாண்டேகு செம்ஸ்போர்ட் திருத்தம் இந்தியரின் கோரிக்கையைத் திருப்தி செய்யக்கூடியதல்லவென்றும், விரும்பத்தக்கதல்லவென்றும், இந்தியர் முன்னேறுவதற்கான வழியில் திருத்தப்படின், இத்திருத்தம் அங்கீகரிக்கப்படும் எனவும் காங்கிரஸில் கூறப்பட்டது. சில திருத்தங்களுடன் இச்சீர்திருத்தத்தைக் காங்கிரஸ் அங்கீகரிக்கத் தயாராகவிருந்தது.

மாண்டேகு செம்ஸ்போர்ட் திருத்தம், ஆகஸ்டு மாசம் 20-ந் தேதி அறிக்கையைக் கொஞ்சந் தழுவியிருந்தபடியாற்றான் இந்தியர் இதைச் சில அவசியமான மாறுதல்களுடன் ஒப்புக்கொள்ளுவதாகக் கூறினார்கள். இந்திய சுயஆட்சிக்கு முதற்படியாக இதைக் கொடுக்கவேண்டுமென்றால் சில மாறுதல்கள் அவசியஞ் செய்யப்படல்வேண்டும். இத் திருத்தம் இப்படியேயிருப்பின் முதற்படியாகாது. காங்கிரசின் அபிப்பிராயமும் இதுவே. எல்லா இந்திய மூஸ்லிம் லீக்கின் அபிப்பிராயமும் இதுவேயாகும்.

தனிக் காங்கிரசிற்குப்பிறகு கூடிய காங்கிரஸிலும் மிதவாதிகள் இத்திருத்தத்திற் சில மாறுதல்கள் செய்யப்படவேண்டுமென்றார்கள். காங்கிரசும், முஸ்லிம் லீக்கும் இதைத்தான் விரும்பியது. சுய ஆட்சிக்கு முதற்படியாக இந்தியா கவர்ன்மெண்டிலும் மாகாணக் கவர்ன்மெண்டுகளிலும் ஜனங்களுக்கு அதிக பொறுப்பு ஏற்படும்படியான திருத்தம் கொடுக்கப்படவேண்டுமென்று இந்தியர்கள் கேட்டார்கள்; கேட்கிறார்கள். பணப் பொறுப்பும் இந்தியர்களுக் குண்டாக வேண்டுமென்றும் கேட்கப்பட்டது.

ஸ்டேட் கவுன்சிலில பாதி அங்கத்தினர்களாவது ஜனங்களாற் றெரிந்தெடுக்கப்படவேண்டும். இந்தியாவின் நிர்வாக சபையில் பாதிப்பொறுப்பு இந்தியருக்கு இருத்தல் வேண்டும். 5-ல் 4 பாகம் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படல்வேண்டும். புதிதாக இத்திருத்தப்படி நியமிக்கப்படும் மந்திரிகளுக்கு நிர்வாகசபை அங்கத்தினருக்குச் சமமான அதிகாரமும் அந்தஸ்துங் கொடுக்கப்பட வேண்டும். இந்தியன் சிவில் உத்தியோகத்தில் 100-க்கு 50 பேர் இந்தியராக விருக்கவேண்டும்.

100-க்கு 25 வீதமாவது கமிஷன் ராங் இந்தியருக்குக் கொடுக்கப்படல்வேண்டும். இவர்களுக்குப் பயிற்சி கொடுக்க இங்கேயே ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அச்சுச் சட்டம் விலக்கப்பட வேண்டும். பேசுஞ் சுதந்தரமும், எழுதுஞ் சுதந்தரமுங் கொடுத்தல் அவசியம். விசாரணை செய்தே ஒருவரைத் தண்டனைக்குள்ளாக்கவேண்டும். இவ்விஷயங்களைப்பற்றியும், இவைகளை அடையும் முறையைப்பற்றியும், தலைவர்களுக்குள் வேற்றுமையான அபிப்பிராயங்கள் இருக்கலாம். இந்தியாவில் திருத்தம் ஏற்படுங்காலையில் கொடுஞ் சட்டங்கள் விலக்கப்படவேண்டு மென்று எல்லோரும் அபிப்பிராயப்படுகிறார்கள். இவ்விஷயங்களைப்பற்றி மறுபடியும் யோசனை செய்வீர்களோ அல்லது தனிக் காங்கிரசிற் செய்யப்பட்டதையே ஆதரிப்பீர்களோ என்னவோ எனக்குத் தெரியாது. நீங்கள் கொடுக்கும் எந்தவிதமான யோசனையையும் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராகவிருக்கின்றேன். 'மாகாண விஷயமான முழுப் பொறுப்புங் கொடுக்கப்படலாமென்று மாகாணத் திருத்தவிஷயமாக நியமிக்கப்பட்ட கமிட்டி அபிப்பிராயப்பட்டது. இக்கமிட்டி அநேக மாகாணங்களிலுஞ் சென்று விசாரணை செய்தது. அக்கமிட்டியின் அபிப்பிராயஞ் சரியானதே.

முழுப்பணப் பொறுப்பாட்சி வேண்டுமென்று வங்காளமுஞ்சென்னையுங் கேட்குமெனநம்புகின்றேன். இந்த விஷயத்தைப்பற்றிக் காங்கிரஸ் செய்திருக்குந் தீர்மானங்கள் ஆலோசிக்கப்படலாம்.

இந்தியாவும் யுத்தத்தின் பயனும்.

இதற்குமுன் காங்கிரஸ் கூடியதற்கு அப்புறம் ஏற்பட்ட சந்தோஷ சமாசாரம் யுத்த முடிவேயாகும். மாண்டேகு செம்ஸ்போர்ட் கோரிக்கையில "இந்தியாவின் எதிர்கால நிலைமை யுத்தகளத்தில் நடக்கும் விடைகளையே பொறுத்திருக்கிறது" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. யாவருஞ் சந்தோஷமாகவே இருக்குமாறு இந்த யுத்தம் முடிவுபெற்றுவிட்டது. "கிரேட் பிரிட்டன், நேசகட்சியார், குடியேற்றநாடுகள், இந்தியா முதலிய யாவும் ஒன்று சேர்ந்து ஒரு பெரிய வெற்றியையடைந்தது. சுதந்தரத்தின்பொருட்டு இப்போர் நடத்தப்பட்டதால் யாவரும் மகிழ்ச்சியடைதற்குரியரே" என்று பிரதம மந்திரியார் கூறினார். இந்தப் பெரிய வெற்றியில் இந்தியா எவ்வளவு பயனை அடையும் என்பதே இப்பொழுது கேள்வி. இந்தியா, இந்தப் போரிற் செய்த உதவிகளுக்குப் பிரதம மந்திரியும் இராஜதந்திரிகளும் எவ்வளவு நன்றி பாராட்டி யிருக்கின்றார்களென்பது குறிப்பிடத்தக்கது. 1914-ம் வருஷம் செப்டெம்பர் மாதத்தில் அப்பொழுது பிரதம மந்திரியாயிருந்த மிஸ்டர் ஆஸ்குவித் பின்வருமாறு கூறியுள்ளார்;—'யாதொரு வித்தியாசமுமின்றி இந்தியா இந்த யுத்தத்திற்குச் செய்திருக்கும் நன்றி என்றும் மறக்கற்பாலதன்று. ஒரே கொடியின்கீழ், நம் தோளோடு தோள் சேர்த்தும் அவர்கள் நமக்கு உதவி செய்துவருதற்கு நாம் பெருநன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மிஸ்டர் போனர்லா கூறியதாவது:—'நமது சோல்ஜர்களுடன் யுத்தஞ்செய்து நம்மவர்பக்கத்திலேயே வீழ்ந்திறந்த இந்தியர்கள் நமக்கு எவ்வளவு உதவி செய்திருக்கிறார்கள் என்பதை நாம் சரியாக அறியவில்லை எனறு நான் நினைக்கின்றேன்."

லார்ட் ஹால்டேன் கூறியதாவது:—'மானிட சுதந்தரத்திற்காக இந்தியர்கள் போர் புரிந்து கொண்டிருப்பதால்,இப்பொழுதுள்ளபடியே அவருடைய விஷயங்களை நாம்விட்டுவிடக்கூடாது."

காமன்ஸ் சபையில் லாயிட் ஜார்ஜ் 1917-ம் வருஷம் பிப்ரவரி மீ கூறியதாவது:—'இந்தியா செய்திருக்கும் உதவிகள் அளவிறந்தன. நமது நெருக்கடியான வேளையில் அவர்கள் செய்திருக்கும் உதவிகள் நமக்குப் பெருநன்மையை விளைவித்தன."

"பிரான்ஸில் இந்திய சிப்பாய்கள்" என்று கர்னல் மோர்லெகாஸ் எனபவர் எழுதிய புத்தகத்தில் லார்ட் கர்சன் முகவுரையாகக் கூறியதாவது:—'மிக்க நெருக்கடியான நிலைமையில இந்திய சேனை உதவியது நேசகட்சியாரும் தற்பொழுதைய நாகரிகத்திற்கும் உதவியதுபோலாகும். இந்த உதவிக்கு நேசத்திலுள்ள ஒவ்வொருவரும நன்றி பாராட்டவேண்டியது அவசியமாகும். இந்தியர் அச்சமயத்திற் செய்த உதவி என்றும் மறக்கற்பாலதன்று' என லார்ட் பிரெஞ்ச் கூறியது எனக்கு நன்றாக ஞாபகமிருக்கின்றது."

காமன்ஸ் சபையில் மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் கூறியதாவது:—"பிறகு இந்தியா இருக்கிறது. பிரிட்டிஷ்சேனைகளுக்கு அஃது எவ்வளவு உதவி புரிந்திருக்கிறது? நமது கஷ்டவேளையில் உதவி செய்ததை நாம் ஒருபோதும மறக்க முடியாது. யுத்தம் முடிந்தபிறகு இந்தியா விஷயங்கள் நம் கவனத்திற்கு வருமானால் நாம் அப்பொழுது அவைகளை நன்றாகக்கவனிக்கவேண்டும்."

சென்ற நவம்பர் மீ 8ௗ மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் கூறியதாவது:—'இந்தச் சிறியஇனங்களும் குடியேற்ற நாடுகளும் மிக்கதைரியமாகச் சண்டை செய்தன. இந்தக் கூட்டத்திற்கு வரும் உரிமையைப் பெற்றன. பிறநாடுகள் நமக்கு உதவிசெய்திருப்பதைப்போல் இந்தியாவும் பல வழிகளில் உதவி செய்து எதிரிகளைச் சின்னபின்னப்படுத்தக் காரணமாயிருந்து இந்தியாவின் சேவைகளை நாம் மறந்துவிடலாகாது."

நாம் யுத்தத்திற் செய்த உதவியைப் பாராட்டியதற்காக நமது இங்கிலிஷ் சகோதரர்களுக்கு நன்றிசெலுத்தக்கடமைப்பட்டிருக்கிறோம். எந்த நோக்கத்தை நிலைநாட்டுவதற்காக இந்தியா பணத்தையும் போர்வீரரையும் அளித்ததோ, அந்நோக்கத்தை இந்தியா எவ்வளவு பெறப்போகிறதென்பதே முக்கியமான கேள்வி. நியாயத்திற்கும் சுதந்தரத்திற்கும் போர்புரிய உதவிய இந்தியர்களுக்கு அவைகள் எவ்வாறு வழங்கப்படும்? தன் சுதந்தரத்திற்கு அழிவில்லாமலும் பிறர் தனக்குத் தீங்கிழைக்காமலும் இந்தியா எங்ஙனம் சுய ஆட்சி பெற்றிருக்க விடப்படும்? பிரிட்டிஷாரும் நேசகட்சியினரும் எந்தக் கொள்கைகளை நிலைநாட்டுவதற்காக யுத்தஞ் செய்தனரோ அந்தக் கொள்கைகள், நான் முன்னரே குறிப்பிட்டுள்ள பிரசிடெண்டு வில்சனின் சமாதான ஏற்பாட்டில் அடங்கி யிருக்கின்றன. அவைகளைப் பிரிட்டிஷார் மனப்பூர்வமாக அங்கீகரித்திருக்கின்றனர். அக்கொள்கைகளை அங்கீகரிக்கதனால் அமெரிக்காவுக்கு உண்டாயிருப்பதைவிட இங்கிலந்துக்கும் பிரான்சுக்கும் அதிகமான கௌரவமுண்டாயிருக்கின்றது ஏனெனில் இவ்விரண்டு நாடுகளும் நான்குவருடகாலம் கடும்போர் புரிந்து, தங்கள் வீரத்தை வெளிப்படுத்தி வெற்றி பெறும் நிலைமையை யடைந்தன. மேலும் அவைகள் இந்த யுத்தத்தில் அமரிக்காவைக்காட்டிலும் அதிக நஷ்டத்தை யடைந்திருக்கின்றன. ஆதலின் தாங்கள் முன்னர்ச் செய்துள்ள ஆலோசனைக்குச் சில அம்சங்களில் மாறுபடுவதான இச்சமாதான ஏற்பாட்டிற்கு இங்கிலாந்தும் பிரான்சும் இணங்கியதானது அவைகளுடைய பெருந்தன்மையைக் காட்டுகின்றது. எல்லா இனத்தவரும் நியாயத்தைக் கடைப்பிடித்து ஒருவருக்கொருவர் சமாதானமாக வாழவேண்டுமென்பதே சமாதான ஏற்பாட்டின் முக்கியநோக்கம். ஒவ்வொரு இனத்தவரும் தங்கள் காரியங்களைத் தாங்களே செய்துகொள்ளும் சுதந்தரத்தைப் பெறவேண்டும். ருஷியா தன் அரசியல்வளர்ச்சியையும் இன ஒற்றுமையையும் பாதுகாத்துக்கொள்ளுமாறு விடப்படவேண்டும். ஆஸ்டிரியா ஹங்கேரியும் தன் ஆட்சிமுறையை விருத்தி செய்துகொள்ள வேண்டும். அரசியல் விஷயத்திலும் வியாபாரக் கைத்தொழில் விஷயங்களிலுஞ் சுதந்தரங் கொடுக்கப்படுமென்று போல்டிக் நாடுகளுக்கும் பால்கன் நாடுகளுக்கும் அறிவிக்கப்படவேண்டும். ஒவ்வொரு இனத்தாருக்கும் உயிர்க்காப்பும் அரசியற் கிளர்ச்சிச் சுதந்தரமும் அளிக்கப்பட வேண்டும். குடியேற்ற நாடுகளின் உரிமைகளை ஒழுங்குபடுத்தும்போது அவைகளை ஆட்சிசெய்யும் அரசாங்கத்தாரின் நன்மை தீமைகளைப்போலவே குடிஜனங்களின் நன்மை தீமைகளுங் கவனிக்கப்படவேண்டும் இச்சுயநிர்மாணம் இந்தியாவின் விஷயத்தில் எங்ஙனம் அனுசரிக்கப்படுமோ அதைப்பற்றி யோசிக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். ஸிரியாவுக்கும் மெஸ்பொட்டேமியாவுக்கும் சுய நிர்மாணம் வழங்கப்படவேண்டுமென்று பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும் பிரெஞ்சுக் கவர்ன்மெண்டாரும் முன்னரே தீர்மானித்திருக்கின்றனர். ஆதலின் நமக்கும் அது வழங்கப்படுமென்று நம்பஇடமுண்டாகின்றது. இந்து அரசர்களுக்கும் மகமதிய அரசர்களுக்கும் இராஜதானியாயிருந்த இந்நகரில் இருந்துகொண்டு அவர்களுடைய பரம்பரையாரான இந்துக்களும் மகமதியருமான நாம் நமக்குச் சுய நிர்மாணம் வேண்டுமென்று கேட்டது நமக்கே வெட்கத்தையும் வருத்தத்தையும் உண்டுபண்ணுகின்றது. நாலாயிரம் வருடங்களுக்குமேல் அரசாண்ட இந்துக்களின் மரபிற் றோன்றியவர்களும் பலநூற்றாண்டுகள் அரசுசெலுத்திய முஸ்லிம் அரசரின் மரபிற்றோன்றியவர்களுந் தங்கள் பெருமையை யிழந்து இப்பொழுது சுதந்தரமேனும் வேண்டுமென்று கேட்குமாறாயிற்றன்றோ? இந்நாட்டின் விஷயங்களைத் தீர்மானிக்கும் பொறுப்பை வகித்திருப்பவர்கள் அநேகவிஷயங்களை அறிந்துகொள்ளவில்லை. போதியகாலமிருப்பின் நான் அவர்களுக்குச் சில வார்த்தைகள் தெரிவிப்பேன். பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வருவதற்கு முன் இந்தியரின் நிலைமை எவ்வாறிருந்ததென்பதை அவர்களுக்கு அறிவுறுத்தவேண்டும். அவர்கள் தாதாபாய் நௌரோஜி எழுதிய "வறுமையும் இந்தியாவிற் பிரிட்டிஷ் முறையல்லாத ஆட்சியும்" என்னும் புத்தகத்தின் 581-ம் பக்கத்திலிருந்து 624-ம் பக்கம்வரையிற் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏறக்குறைய 6 கோடி ஜனத்தொகையுள்ள இந்தியாவின் மூன்றிலொருபாகம் சுதேசமன்னர்களின் ஆளுகையிலேயே இருந்துவருகின்றது. அந்த இராஜ்யங்களின் ஆட்சிமுறை பிரிட்டிஷ் ஆட்சிக்கு எவ்வழியிலுங் குறைந்ததன்று. நாம் 150 வருடங்களாகப் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்தும் சுதேசங்களில் இருப்பவர்களைவிட நாம் சுய ஆட்சி பெறக் குறைந்த யோக்கியதையுடையவர்களாயிருக்கிறோமா? சேர் ஜே. சி. போசைப்போன்ற இரசாயன சாஸ்திரியையும், சேர். ரவீந்திரநாத் டாகூரைப்போன்ற கவிஞரையும், சேர். பாஷ்யம் ஐயங்கார், சேர். ராஷ்பிகாரிகோஷைப்போன்ற நியாயவாதிகளையும், சேர். டி. மாதவராவ், சேர். ஸாலர்ஜங் போன்ற இராஜதந்திரிகளையும், சேர் ஸையத் அமீரலி முதலியவர்களைப் போன்ற நீதிபதிகளையும், தாதாபாய்நௌரோஜி, ராணடே முதலியவர்களைப் போன்ற தேசாபிமானிகளையும், பெரோஸ்ஷா மேடா கோகலே போன்ற தேசஊழியர்களையும், ஜே. என். டாடா போன்ற கைத்தொழில் நிபுணர்களையும், மகாத்மா காந்தியைப் போன்ற ஒரு ஜீவஊழியரையும், யுத்தஅரங்கங்களிற் புகழ்பெற்ற போர்வீரர்களையும் படைத்துள்ள ஒரு நாட்டினர் தங்கள் காரியங்களைப் பார்த்துக்கொள்ளத் திறமையற்றவர்களா? சுய ஆட்சி கொடாமல் வருத்துவதுடன் நம்மை நம்பாமலும் இழிவுபடுத்துதல் இனி வேண்டாம். நமக்கும் சுயநிர்மாணம் வழங்கப்படவேண்டும். (வரும்) தே. பக.

கடிதம்.

தருமம்.

(முற்றொடர்ச்சி.)

ஈகை.

ஈகை என்பது ஒருவர் தம்மிடத்துள்ள யாதானுமொரு பொருளைப் பிறிதொருவர்க்குத் தருவதாகும். அது மகனுக்கு அரசு கொடுத்தலாகிய உரிமையிற் கொடுத்தலும், அரசனுக்குத் திறை கொடுத்தலாகிய அச்சத்திற் கொடுத்தலும், வறியார்க்குப் பொன் கொடுத்தலாகிய இரக்கத்திற் கொடுத்தலும் முதலாகப் பலதிறப்படும். இவற்றுள் இரக்கத்திற் கொடுத்தலே மிகச் சிறப்புடைத்து.

"வறியார்க் கொன்றீவதே யீகை மற்றெல்லாங்
குறி யெதிர்ப்பை நீர துடைத்து"

என்றார் திருவள்ளுவர். ஆகவே உண்மையான ஈகை என்பது கொள்வாரால் எவ்வித பயனுங் கருதாது தம்முள்ளத்தெழுந்த கருணை மேலீட்டாலே காலம் இடம் முதலியனகுறியாமற் பிறர்க்குதவுவதேயாம். இதனை,

இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வாணிக னாயலன்
பிறருஞ் சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப்பட்டன் றவன்கைவண்மையே.

என்னும் புறநானூற்றுக் கவிதாலும் (இப்பிறப்பிற் செய்தொன்று மறுபிறப்பிற் குதவுமென்று கருதிப் பொருளை விலையாகக் கொடுத்து அதற்கு அறங்கொள்ளும் வாணிகன் ஆயல்லன்; அமைந்தோர் பிறரும் போயவழியென்று உலகத்தார் கருத அந்த நற்செய்கையிலே பட்டது, அவனது கைவண்மை" என்னும்) அதனுரையாலு மறியலாகும்.

பாத்திரமறிந்து பிச்சையிடு என்பது வழக்கமேயாயினும் இரக்கம் பெருகியவிடத்துப் பாத்திராராய்ச்சி சித்தியடையாது. யுத்தகளத்தே சென்று யுத்தஞ் செய்கின்றவீரன் எதிர்ப்பட்டோர் தந்தையாயினும் சோதரராயினும் குரு ஆயினும் அவர்களோடு அமரியற்றிக்கொல்வதன்றிப் பிதிர்ஹத்தி, சகோதரஹத்தி, குருஹத்தி என்னும் மகாபாவம் வருமேயென்று நினையாதவாறுபோல, இரப்பவருக்கு எதையுங் கொடுக்க வேண்டுமென்னும் நியமமுடையோர் இரப்போரைக் கண்டவுடன் ஈய நினைப்பதேயன்றி இரப்போருடைய குணதோஷங்களைப் பரீட்சிக்கமாட்டார்கள். இவ்வாறு எப்போதுமுடைய தன்மையைக் கருதாது கொடுத்தலைக் கொடைமடமென்பர் ஆன்றோர். இதனை,

"அறுகுளத் துகுத்து மகல்வயற் பொழிந்து
முறமிடத் துகவா துவர்நிலமூட்டியும்
வரையா மரபின் மாரிபோலக்
கடாஅயானைக் கழற்காற்பேகன்
கொடைமடம் படுதலல்லது
படைமடம்படான் பிறர்படைமயக் குறினே"

என்னும் புறப்பாட்டா னறியலாகும். இதன்பொருளாவது: வற்றிய குளத்தின்கண்ணே பெய்தும் அகன்ற விளைநிலத்தின் கண்ணே சொரிந்தும் இவ்வாறு குளத்தும் விளைநிலத்தும் பெய்யாது களர்நிலத்தை நிறைத்தும் எவ்விடத்தும் வரையாத மரபினையுடைய மழைபோல மதமிக்க யானையினையுடைய கழல்புனைந்த காலையுடைய (வள்ளல்களு ளொருவனாகிய) பேகன் கொடையிடத்துத் தான் அறியாமைப்படுதலல்லது பிறர் படைவந்து கலந்த போரின் அப்படையிடத்துத் தான் அறியாமைப்படான்" என்பதாம்.

(படைமடமென்றது வீரரல்லாதார்மேலும், முதுகிட்டார்மேலும், புண்பட்டார்மேலும் செல்லுதலை)

முற்காலத்துத் தமது பூர்வ[illegible] புகழுடைப் பொன்றாது இசை நாட்டினங்கப்பெற்ற மன்னர்களும், அரசர்களும், பிரபுக்களுமாகியோ ரெல்லாமயி [illegible] யாவர்,

இவர்களுட் பலவேந்தர் முரசமுழக்கி (அரசர்க்குரிய அங்கங்கள் பத்தனுள் முரசமுமொன்றெனவும், அம்முரசம்: வீரமுரசு, நியாயமுரசு, தியாகமுரசு என மூன்று வகைப்படுமெனவு மறிக இதனை,

"வையகமாக்கமூர் திரையமுத்தமு
மியிழ்முரசு மூரசமூன் றுடனாளுர்
தமிழ்கெழுகூடற்றண்கோல்வேந்தே"

என்னும் புறநானூற்றுக் கவியில் உரையாசிரியர் "முரசமூன்றாவன: வீரமுரசம், நியாயமுரசம், தியாகமுரசம்" என்பராதலறிக. இதன்றி நீதிமுரசம், கொடைமுரசம், வீரமுரசம் எனச் சிலரும், மங்கலமுரசு, வெற்றிமுரசு, கொடைமுரசு எனச் சிலருங் கூறுப.) இரப்பவர்க்கு யவைகள் வேண்டுவ கொடுத்துப் புகழ்பெற்றனராவர்.

"கடிப்பிகுகண்முரசங்காதத்தோர்கேட்ப
விடித்துமுழங்கியதோர்யோசனையோர்கேட்ப
ரடுக்கியமூவுலகுங் கேட்குமே சான்றோர்
கொடுத்தாரெனப்படுஞ்சொல்" (நாலடியார்)

என்பது மிதுபற்றியன்றே?

இதன்றிப் பெருங்கொடையாளிகளாகிய அரசர் பலர் இக்கொடை காரணமாக "வள்ளல்" என்னுங் காரணப்பெயர் பெற்றனர். இவர்களுள்: வரைவின்றி யாவருக்குங் கொடுக்குங் குணத்தினரான சகரன், நளன், காரி, துந்துமாரி, நிருதி, செம்பியன், விராடன் என்போரெழுவரும் தலைவள்ளலெனப்படுவர்.

இரப்போர்க்கீகின்ற குணத்தினரான அந்திமான், சந்திமான், சிசுபாலன், அக்குரன், வக்கிரன், கன்னன், சந்தன் என்போரெழுவரும் இடைவள்ளலெனப்படுவர்

புகழ்வோர்க்கீயுங் குணத்தினரான பாரி, பேகன், காரி, ஆய், அதிகன், நள்ளி, ஓரி (அதிகனையும் காரியையும் நீக்கி எழினி, மலையன் எனவழங்குவதுமுண்டு) என்போரெழுவருங் கடைவள்ளலெனப்படுவர். இவ்வள்ளல்களுட் கடைவள்ளலெழுவரையும் ஆங்காங்கு நல்லிசைப் புலவர்கள் பலர் பலவாறு வியந்து கூறியுள்ளார்கள். அவற்றுட் சிலவருமாறு:—

"வானம்வாய்த்த வளமலைக்கவாஅற்
கானமஞ்ஞைக்குக் கலிங்கநல்கிய
வருந்திறலணங்கி னாவியர்பெருமகன்
பெருங்கடனாடன் பேகனுஞ்சுரும்புண
நறவீயுறைக்கு நாகநெடுவழிச்
சிறுவீமுல்லைக்குப் பெருந்தேர்நல்கிய
பிறங்குவெள்ளருவி வீழுஞ்சாரற்
பறம்பிற்கோமான் பாரியுங்கறங்குமணி
வாலுளைப்புரவியொடு வையகமருள
வீரநன்மொழி யிரவலர்க்கீந்த
வழறிகழ்ந்திமைக்கு மஞ்சுவருநெடுவேற்
கழறொடித்தடக்கைக் காரியுநிழறிகழ்
நீலநாகநல்கியகலிங்க
மாலமர்செல்வர்க் கமர்ந்தனன்கொடுத்த
சாவந்தாங்கிய சாந்துபுலர்திணிதோ
ளார்வநன்மொழி யாயுமால்வரைக்
கமழ்பூஞ்சாரற் கவினியநெல்லி
யமிழ்துவிளைதீங்கனி யௌவைக்கீந்த
வுரவுச்சினங்கனலு மொளிதிகழ்நெடுவேல்
வரவக்கடற்றானை யதிகனுங்கரவாது
நட்டோருவப்ப நடைப்பரிகார
முட்டாதுகொடுத்த முனைவிளங்குதடக்கைத்
துளிமழைபொழியும் வளிதுஞ்சுநெடுங்கோட்டு
நளிமலைநாடன் னள்ளியுநளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர்நாகத்துக்
குறும்பொறைநன்னாடு கோடியர்க்கீந்த
காரிக்குதிரைக் காரியொடுமலைந்த
வோரிக்குதிரை யோரியுமெனவாங்
கெழுசமங்கடந்த வெழுவுறழ்திணிதோ
ளெழுவர்பூண்ட வீகைச்செந்நுகம்"

என்று பத்துப்பாட்டினுள் மூன்றாம்பாட்டாகிய சிறுபாணாற்றுப்படையில் இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனாரும்,

"உடாஅதுபோரா அஅகுதலறிந்தும்
படாஅமஞ்ஞைக் கீத்தவெங்கோ
கடாஅயானைக் கலிமான்பேக
னெத்துணையாயினு மீத்தனனென
மறுமைநோக்கின் றோவன்றே
பிறர்வறுமைநோக்கின் றவன்கைவண்மையே'

என்று புறநானூற்றில் பரணரும்,

"..........ஆர்வமுற்
றுள்ளிவருநருலைவுநனிதீரத்
தள்ளாதீயுந் தகைசால்வண்மைக்
கொள்ளாரோட்டியநள்ளியும்'

என்று புறநானூற்றில் பெருஞ்சித்திரனாரும் வியந்து கூறினர்கள். இதுமட்டோ சுந்தரமூர்த்திசுவாமிகளும் திருப்புகலூர்ப்பெருமானைப் பாடிய தேவாரப்பதிகத்தில்

"கொடுக்கிலாதானைப் பாரியேயென்று கூறினுங் கொடுப்பாரிலை"

என்று பாரி என்னும் வள்ளலது வண்மையைச் சிறப்பித்தனர். இவ்வுலகத்திற்கெல்லாம் காரணம் கொடையேயாகும். இதனால் இவர்கள் 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் பொய்யாமொழிக்கிலக்காகி விளங்கினர்.

(தொடரும்)

இ. கு. பூர்ணசந்திரேசுவரக் குருக்கள்,
திரிகோணமலை.

அடைவு நகைவிற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டநிச்சட்டத்தின்படி லைசென்சு பெற்ற அடைவு பிடிக்கும் வண் கிழக்கு வைத்தியலிங்கம் குலசேகரம்பிள்ளையிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி டிெ சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டியனவாகிய நகைகளின் விபரம்:—

நம்பர்	1917-ம் ஆ மாசம்	தேதி.	ரூ.	அடைவுவைத்தவர் பெயர்;	ஊர்.	நகைவிபரம்.
1642	ஆடி	8	20	சே. / எ டி. சுப்பிரமணியஐயர்,	வண்-கிழக்கு	கற்காதோலை சோ. 1
1733	,,	29	7	கா ஆறுமுகம்	அத்தியடி	பின்கோர்க்கி 1
1866	புரட்டாதி	12	12	கு. செல்லப்பா	வண்மேற்கு	வெ. சங்கிலி சோ. 1
1891	,,	15	35½	ஆ. தாமோதரம்பிள்ளை	ஓட்டுமடம்	கற்காதோலை சோ. 1
1927	,,	23	12	வே. பொன்னையா	வண்-கிழக்கு	கற்காதோலை சோ. 1
1962	,,	29	25	க. செல்லையா	நல்லூர்	வளையல் 1
2024	,,	29	11	இ. விசுவலிங்கம்	வண்-கிழக்கு	திருகுபூ 1
2147	கார்த்திகை	7	20	செ. இராசகோபாலு	,,	தாயித்து 1
2176	,,	12	10	சி. கந்தையா	அச்செழு	மணிக்கோவை 1
2214	,,	22	10	த. சங்கரப்பிள்ளை	வண்-கிழக்கு	மோதிரம் 1
2228	மார்கழி	5	6	மா. கணபதிப்பிள்ளை	நல்லூர்	வெ. ஒட்டியாணம் 1
2304	,,	8	50	அ. செல்லையா	சேணியதெரு	பட்டணக்காப்பு சோ. 1
2307	,,	9	8	வே. தம்பிப்பிள்ளை	வண்-கிழக்கு	வெ. சங்கிலி சோடி 1
2308	,,	10	12	கா. விசுவநாதி	,,	பின்கோர்க்கி 1
2311	,,	10	15	வெ. சரவணமுத்து	,,	உச்சட்டு கோவை 1
2320	,,	12	15	நா. பெத்தாச்செட்டி	சேணியதெரு	தாயித்து ஒன்று
2336	,,	15	25	சி. சின்னத்தம்பி	வண்கிழக்கு	காப்பு சோடி ஒன்று
2361	,,	18	10	வீ. செல்லையா	ஆரியகுளத்தடி	கல்வாளி சோடி ஒன்று
2365	,,	19	8	சி. வைத்தியலிங்கம்	வண்-கிழக்கு	கடுக்கன் 2
2373	,,	22	20	மு. வள்ளியம்மை	கந்தர்மடம்	மோதிரம்1; அட்டியல்1; வெ.
1211	சித்திரை	12	10	ஆ. எல்லுப்போலை	வண்-கிழக்கு	தாயித்து1. [சலங்கைகோவை1
1082	பங்குனி	21	10	கா. சின்னத்தம்பி	,,	சுற்,சி
1050	,,	16	10	மு. சிவன் அடியான்	,,	மணி அட்டியல்

விற்பனவு:—1919 ஆண்டு பிப்ரவரிமீ 8உ (காலயுக்தி௵ தைமீ உசு) சனிக்கிழமை பகல் பத்து மணியளவில் வை. குலசேகரம்பிள்ளையவர்கள் வீட்டில் டிெ நகைகள் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார், லெந்தீஸ் மேஸ்தர்.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

—:o:—

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டநிச்சட்டத்தின்படி லைசென்ஸ்சு பெற்ற அடைவுபிடிப்பவர்களாகிய திரிகோணமலை 8-ம் நம்பர் சாகக்கடை வீதி வே. தம்பர் வெற்றிவேற்பிள்ளை, சிதம்பரப்பிள்ளை & தாமிப்பிள்ளை என்பவர்களிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி டிெ சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

நம்பர்	ஆண்டு	மாதம்	தேதி	ரூபா	சதம்	அடைவுவைத்தவரின் பெயர்;	ஊர்.	அடைவுப்பொருளின் விபரம்.
1511	1916	ஆனி	8	12		ஆறுமுகப்பெண் ஆனுப்பிள்ளை,	10-ம் நம்பர்	பவுண் வெட்டுக்காப்பு சோடி 1; தகடு 2.
1632		ஆடி	9	15		முத்துச்சாமி வயித்திலிங்கம்,	7	டிம்மியுடன் சரடு 1
A 170		புரட்டாசி	1	23		நன்னித்தம்பி மூத்ததம்பி,	1	கிள்ளட்டியல் 1 கிள். 1 இல்லை
A 176			2	12		காளியப்பு வயிரமுத்து,	கிளிவெட்டி	பஞ்சாயுதமுடன் மணிகள்
A 284			21	8		அந்தோனி அதிரியான்,	மூதூர்	தோடு சோடி 1
A 292			23	6		சின்னத்தம்பி வல்லிபுரம்,	8-ம் நம்பர்	மெழுகுக் குலைக்கடுக்கன் சோடி 1. க. இ.
A 293			23	6		மதுரை பழனி,	கிலாவெளி	தோடு சோடி 1
A 308			25	25		சவுரிமுத்து பெண் செல்லம்,	2-ம் நம்பர்	பதசரடு 1
A 434		ஐப்பசி	15	6		கனகர் சாமிநாதர்,	5	முத்தில்லாத சிமிக்கி சோடி 1
A 728		கார்த்திகை	20	15		அசனுலெவ்வை அகம்மதுலெவ்வை,	மூதூர்	பூசாந்தரம் 1 [ன்சதாவாளி சோடி 1.
A 742			21	105		கோணாமலை எரம்பு,	மருதடிச்சேனை	பொன்பூட்டுக்காப்பு சோடி1; காதுமணிசோடி3; பொ
A 809			30	340		அ. சிவசுப்பிரமணியம்,	6-ம் நம்பர்	½பவுண் 44, முழுப்பவுண் 1 கோர்த்த பவுண்மாலை1
A 840		மார்கழி	2	17		ச. நடராஜபிள்ளை,	6	கல்செருகுதோடு சோடி 1. சுரைக்குக் கல்லில்லை
A 934			22	30		சவுரிமுத்து பெண் செல்லம்	2	கல்திருகுபூ 1
A 1012	1917	தை	3	10		சீனித்தம்பி சாய்புத்தம்பி	மூதூர்	வளையல் 8
A 1155			30	7		தம்பையா செல்லையா	7-ம் நம்பர்	பின் இல்லாத சவுக்கமணிக்கோவை 1
A 1164		மாசி	1	7		சாவணை மகள் சின்னப்பிள்ளை,	உப்புவெளி	கூடு 1
A 1275			27	20		ம. லெவ்வைமரக்காயர்,	மூதூர்	தாலிக்கொடி 1
A 1340		பங்குனி	17	12		அலியார்த்தம்பி சீனித்தம்பி	,,	பூசாந்தரம் 1
A 1457		சித்திரை	10	68		அ. சிவசுப்பிரமணியம்	6-ம் நம்பர்	ஒருபட்டிலை மாலை 1; வெள்ளிப்பாதசரம் சோடி 1.
A 1478			14	13		நன்னித்தம்பி மூத்ததம்பி	1	சம்புகாதவளையல் 1
A 1490			16	10	04	அ. சிவசுப்பிரமணியம்	6	திருகுபூ 1
A 1527			24	7		தம்பி சின்னக்குட்டி	8	வெள்ளிச்சண்டை சோடி 1 [சோடி 1.
A 1703		வைகாசி	31	16		வயித்திலிங்கம் மயிலு	8	கொப்புச்சிமிக்கி சோடி1; வெள்ளி பழையபாதசரம்
A 1806		ஆனி	18	6	50	சின்னத்தம்பி நம்பான்	தோப்பூர்	சிறுபூசாந்தரம் 1
A 1823			20	8		வேலுப்பிள்ளை சிவப்பிரகாசம்,	மொறக்காவை	தோடு சோடி 1
A 1842			22	140		ச. நடராஜபிள்ளை	6-ம் நம்பர்	சிங்கமுகக்காப்பு சோடி 1
A 1876		ஆடி	1	8		வயித்திலிங்கம் மயிலு,	8	குலைக்கடுக்கன் சோடி 1. க. இ.
A 1882			2	6		மம்மதுமதார் பிச்சைக்குட்டி,	மூதூர்	வெ. கடயம் சோடி 1. க. இ. நசியல்
A 1897			4	32		அசனார் அகம்மது லெவ்வை	,,	அலுக்குத்து 20; 6க்கு அரசிலை சங்கிலி இல்லை 1க்குக் கம்பி இல்லை; வெள்ளி பழையதண்டை சோடி 1.
113		ஆவணி	20	17		பெரியான் வைத்திலிங்கன்	9-ம் நம்பர்	சிறுசவுக்கமணிக் கோவை ஒன்றுக்கு மணி 29
114			20	14		,,		தட்டு 1
165			27	45		அ. உ. சீனித்தம்பி	மூதூர்	ஆறுபட்டு மணிக் கோவை 1
218		புரட்டாதி	6	12		அ. சிவசுப்பிரமணியம்,	6-ம் நம்பர்	மோதிரம் 1
386		ஐப்பசி	5	20		கதிரிப்பிள்ளை குமாரு	கிலாவெளி	பவுண்காப்பு சோடி 1
397			7	6		க. சரவணமுத்து	6-ம் நம்பர்	தோடு சோடி 1
438			16	13		மரக்காயர் லெவ்வைமரக்காயர்,	மூதூர் [ப்பூர்	பூசாந்தரமுடன் மணி 4
550		கார்த்திகை	8	70	25	சின்னத்தம்பிலெவ்வை சதக்குலெவ்வை,	தோ	பொன்தரிக சோடி 1
551			8	15		அசனுலெவ்வை குப்பைத்தம்பி,	தோப்பூர்	உட்கட்டு 1 [பழுது
651			22	8	50	அமரசிங்கம் சந்தப்பு,	3-ம் நம்பர்	கொப்புச்சிமிக்கி சோடி 1; வெள்ளிக்கொலிசு சோடி 1
695			29	7		சின்னத்தம்பி சோமநாதி,	தாமரைவில்	சவுக்கமணிக்கோவை 1க்கு மணி31; குண்டூடாணி இ.
706			30	10		செம்பகம் பெண் சின்னத்தங்கம்,	7-ம் நம்பர்	திருகுபூ 1
711		மார்கழி	1	9		குப்பைத்தம்பி மகுமுது,	பெ. கிணியா	பூசாந்தரமுடன் வெள்ளிமணி 4
732			6	5	50	சின்னான் பெண் கோணாத்தை,	5-ம் நம்பர்	பொன்கொப்புச் சிமிக்கிசோடி 1
735			7	7		கதிர்காமு தம்பையா,	10	கொப்புச்சிமிக்கி சோடி 1 [வெள்ளி அரைஞாண் 1.
886			26	23	04	ம. லெவ்வைமரக்காயர்,	மூதூர்	பழையதாலிக்கொடி 1; கம்பியில்லாத தோடு சோடி 1;

விற்பனவு:—1919-ம் ஆ பிப்ரவரிமீ 26-ந் தேதிக்குச் சரியான காலயுக்தி௵ மாசிமீ பதினொந்தாந்தேதி புதன்கிழமை காலை எட்டு மணியளவில் டிெ கடைத்திண்ணையில் ஏடுபடடநகை [illegible]லாகப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. பொ. விசுவநாதஉடையார் லெந்தீசு மேஸ்தர்,

இதைக் கவனியுங்கள்.

உலகமெங்குங்கியாதிபெற்றுக்கையாண்டுவரும்
மருந்துகளின் விபரம்.

1. கேர்ப்ப உற்பத்தி மூலிகை உப்பு.

இது கெர்ப்பஸ்தானத்தில் சதை வளர்தல், பாசி படர்தல், காலாகாலங்களில் மாதவிடாயாகாமற் சரீரம் பருத்தும் இளைத்தும் இருத்தல், பொறுக்க முடியாத வயிற்றுவலி முதலிய காரணங்களால் கெர்ப்ப உற்பத்தி இல்லாதிருப்போர்க்கு அந்நோய்களை மாற்றிக் கெர்ப்பத் தரிக்கச்செய்யுமென்பது திண்ணம்.

௧௧ நாள் மருந்தின் கிரயம் ரூபா ௧.

2. தாதுவிர்த்திக்குப் பஞ்சாமிர்த லேகியம்.

இந்த அமிர்தம்போன்ற லேகியத்தைப் பாவித்த தன்பின்பே இதன் குணம் வெளியாகும்.

௧௧ நாள் மருந்தின் கிரயம் ௹ ௨, அணு ௮.

3 பிரமேக வியாதிக்குச் சந்துச்சேந்தூரம்.

எவ்வித பிரமேகமும் இம்மருந்தை யருந்தினால் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும்.

௧௧ நாள் மருந்தின் கிரயம் ரூபா ௨.

4. எவ்வித வாய்வுகளுக்குஞ் சண்டமாருதக் குளிகை.

சரீரத்தின் எந்தஇடத்திலும் ஓடிக்குத்தும்வாய்வுகளுக்கும் மற்றையெவ்விதவாய்வுகளுக்கும் இம்மருந்தேகாண்டீபம். ஐந்துநிமிஷத்திற் குணமாகும்.

௧௫ மாத்திரை புட்டி ஒன்று ௹ ௧, அணு ௮.

5. மேகசஞ்சீவிச் சூரணம்.

மேகரோகமுண்டாகியபின் காணப்படும் அரையாப்பு முதலிய சர்வரோகங்களையும் இம்மருந்து நீக்கிவிடும். ௨௨ நாள் மருந்து ௹ ௨.

6. புளிப்பு மாதுளம்பழ லேகியம்.

அன்னத்துவேஷம், பித்தக்கிறுகிறுப்பு, ஜீரணக்குறைவு, மலக்கட்டு இவைகளுக்குச் கைகண்ட ஔடதம்.

௧௧ நாள் மருந்தின் கிரயம் ௹ ௧, அணு ௮.

7. இளைப்புஇருமலுக்குச் சுவாசகாசச்சூரணம்

எவ்வித இளைப்பு இருமல்களையும் அகற்றும்.

௨௨ நாள் மருந்து ௹ ௨.

8 மூலிகை ரத்தினத் தைலம்.

அபூர்வ மூலிகைகளாற் தயாரித்த சுகந்த பரிமளமுள்ளது. குணத்திற் சிறந்தது. மணத்தில் மிகுந்தது. ஒருமுறை அரைக்கால் ரூபாவிடை தைலத்தைத் தலைக்கிட்டுக்கொண்டால் அன்று முழுவதும் ஜிலுஜிலுப்புடனிருப்பதுமன்றி ஒருவாரம் வரை பரிமளம் மாறாது. 8 அவுன்ஸ் டின் 1-க்கு ௹ 1.

9. பசிமள பற்பொடி.

பல் கூச்சம், இரத்தம் வருதல், துர்நாற்றம் இவைகளை மாற்றிப் பல் கறுக்காமல் முத்துப்போலிருந்து நறுமணங்கமழச்செய்து பல்வலியையும் 2 நிமிஷத்தில் கேட்கும்.

டப்பி 1 க்கு ௹ 0-4-0 டஜன் 0 க்கு ௹ 2-12-0.

10. படர்மேக சங்காரி வெண்ணெய்.

மேகரோகால் தேகத்திலெழும் எவ்வித படர்தாமரைப் படைகளையும் ௧ வேளையிற் குணமாக்கும்.

டப்பி ௧-க்கு அணு ௪, டஜன் ௧-க்கு ௹ ௨, அ. அ.

எவ்வித மருந்துகளும் உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

தவறுதீர்கள்! இதுசமையம்!! தவறுதீர்கள்!!!

உங்களுங்கள் அதிஷ்டத்தைப் பரீக்ஷித்துப்பாருங்கள்.

(க) ஜாதகத்தை அனுப்புங்கள். இல்லாவிடில் ஜனனவருஷம் மாசம் தேதி நாழிகை என்னும் இவைகளை அனுப்புங்கள். இல்லாவிடில் இது பார்த்தவுடன் இதனடியிற் குறித்துள்ளவைகளில் எந்தப்பாகம் வேண்டுமோ அந்தப்பாகம் வரைந்தனுப்பினால் இன்னின்ன காலத்தில் இன்னவயதுக்குள் இன்னவை கிட்டும் கிட்டாதெனவும் கடிதம் கிடைத்த நேரத்தைக் கொண்டு இன்னவிதமுடிவுபெறுமென்று சண்முகநாதன் திருவருளால் வரைந்தனுப்புவோம்.

(உ) ௧. ஆயுட்பாகம், ௨. எந்தவிதத்திலும் தனங்கிடைக்கும், ௩. கல்யாணம் சொந்தமா, ௪. களத்திரபாகம் எத்தனை, ௫. அது முன்னு பின்னு, ௬. புத்திரனுண்டா, ௭. தனம் வைத்துப் போவேனு, ௮. மரணமாகுமிடம் சுயதேசமா, ௯. சொந்தவீடு கிலம கிட்டுமா, ௧௦. கடன் எப்போது கிவிர்த்தியாகும, ௧௧. விவகாரம ஜெயமாகுமா, ௧௨. வினைத்தகாரியம முடியுமா.

தனி ஒருபாகம் சார்ஜ் ௹ ௧.

முழுத்தொகையும் அனுப்பவேண்டும்.

௧௨ பாகம் சார்ஜ் ௹ ௫.

பாதிச்சார்ஜ் முற்பணமாக அனுப்புவோர்க்கு வி. பி. போஸ்தில் அனுப்புவோம்.

விபரந்தெரியவிரும்புவோர்விலாசம எழுதினுல் ஜோதிஷ, வைத்திய "கியாட்லாக்" இனுமாக அனுப்புவோம.

வீ. பீ. சார்ஜ் பிரத்தியேகம்.

K. V. கோவிந்தசாமிநாயுடு,
ஜோதிஷம், வைத்தியம்,
மேலைச் சித்திரவீதி.
மதுரை.

☞ இவைகளுக்கு எழுதுவோர் இப்பத்திரிகையைக் குறிப்பிட்டுக் காட்டவும்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க
மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா
துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்
றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி
விளங்குக வுலகமெல்லாம்

☞ Printed and published by S. T. M. P. Sithambaranatha Chettiar, for the Proprietors at the SaivaPrakasa Press, Jaffna.